# தபால் பொதிகள் விமானத்தில் போகும்?

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர்: 11
இதழ்: 293
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 18 ம்நாள் 22 புதன்கிழமை [3-12-69]

# ஆட்சி மன்றத்தைக் கலைக்கும் நோக்கம் இந்திய அரசுக்கு கிடையாது

## லோக் சபையில் சட்ட மந்திரி விளக்கம்

புதுடில்லி, நவ. 2 ஆட்சிமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்தும் உத்தேசம் இந்திய அரசுக்கு இல்லை. உத்தியோகபூர்வமாக இன்று இந்தத் தகவல் அறிவிக்கப்பட்டது.

லோக்சபையில் இன்று சட்ட அமைச்சர் திரு. கோவிந்தமேனன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதில் தேர்தல் கமிஷன் அளவுக்குமீறிய அவசரம் காட்டுவதாகவும், இது பொதுத்தேர்தல் விரைவில் நடக்கவிருப்பதைக் குறிப்பதாகவும் அங்கத்தவர்கள் சபையில் கருத்து வெளியிட்டார்கள்.

[illegible]ச் தேர்தல் நடைபெறுமா ஆட்சிமன்றம் கலைக்கப்படுமா என்பது பற்றி திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் ராம்சுபாக்சிங் வற்புறுத்தினர்.

சட்ட அமைச்சர் திரு. கோவிந்தமேனன் பதிலளிக்கையில் ஆட்சிமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை. வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் தேர்தல் கமிஷன் அவசரம்காட்டவில்லை. அரசியல் சட்டத்துக்கமையவே தேர்தல் கமிஷன் தனது கடமைகளைச் செய்துவருகின்றது என்று கூறினர்.

லோக் சபையில் துணை சபாநாயகர்தேர்தல் [illegible]த்த செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

## தமிழரசு மீது சிங்களவர்

## சுருட்டுத் தொழிலாளர் 2000 பேர் திரும்பினர்; வேலைநிறுத்தம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், புதன் சம்பளஉயர்வுகோரிவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த சுருட்டுத்தொழிலாளர்களுள் சுமார் 2000 பேர் நேற்று வேலைக்குத் திரும்பியுள்ளனர். 1000 சுருட்டுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 13 ரூபா கூலியை 15 ரூபாவாக அதிகரித்து வழங்கவேண்டுமெனக்கோரி சுமார் 13000 தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் வேலை நிறுத்தத்தில் குதித்திருந்தனர்.

பல உற்பத்தியாளர் சங்கங்கள் சம்பள உயர்வு கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்தே 2000 பேர் வேலைக்குத் திரும்பினர் என்று அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

சம்பள உயர்வு கோரிக்கைக்கு ஏனைய உற்பத்தியாளர் சங்கங்கள் இணக்கம் தெரிவிக்கும்வரை வேலைநுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதென்றுநேற்று நடைபெற்ற அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத்தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. திரு. ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. கே. பொன்னுத்துரை, புறக்டர் அ வி விசுவநாதன். க விசுவலிங்கம், கே ஐ நாகராஜா ஆகியோர் வேலைநிறுத்த நிலைபற்றிப் பேசினர்.

## யாழ் கிறிஸ்மஸ் வழாவில் நான்கு தூதராலயங்களின்

திரைப்படக்காட்சியும் நடைபெறும்

## யாழ்-கொழும்பு பஸ் சேவை

யாழ்ப்பாணம்,புதன் வேலைநிறுத்தம்காரணமாக புகையிரதசேவை தடைப்பட்டுள்ள போதும் யாழ்ப்பாணத்திலிருந்து செல்ல இ. போ. ச. பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு, திருமலை, கண்டி, அனுராதபுரம் ஆகியஇடங்களுக்குச் செல்லும் இ. போ. ச. பஸ்களில் எவ

## ரயில் வேலை நிறுத்த எதிரொலி

யாழ்ப்பாணம்,புதன்

யாழ்ப்பாணத்திலிருந்துமெயில்வண்டியில் கொழும்பிற்கு அனுப்பப்பட்டுவந்த தபால் பைகளை விமானத்தில் அனுப்புவதுபற்றி தபால் பகுதி உயர்தர அதிகாரிகள் நேற்று ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது.

தபால் பைகளைஎப்படிஅனுப்புவது என்பதுபற்றி நேற்று நண்பகல்வரை யாழ்ப்பாணத்தபால் கந்தோருக்கு எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை.

புகையிரதப்பகுதி காரர்ட்மார்சங்கமும் சாரதிகள்சங்கமும் வேலைநிறுத்தம் செய்ததால் வடபகுதி புகையிரத நிலையங்கள் எல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன.

கொழும்பிலிருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்ட மெயில்வண்டி நேற்றுக்காலை காங்கேசன்துறை வந்தடைந்தது.இதன்பின் முற்றுகப் புகையிரதசேவை ஸ்தம்பித்தது. பிரயாணிகள் பஸ்களிலும் தனிப்பட்ட வான்களிலும் கார்களிலும் பிரயாணம் செய்தனர்.

### பஸ்சேவை

வடபகுதியில் வழக்கம்போலவே பஸ்சேவை நடைபெறுவதாகவும் மேலதிக சேவைகள்எதுவும் நடைபெறவில்லை யென்றும் இ.போ ச. யாழ்.டிப்போவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வழக்கம்போல் மெயில் கட்டுவதா இல்லையா என்பது பற்றி நேற்று பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் தபால் கந்தோர்களுக்கு எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை. வடபகுதியிலுள்ள உபதபாற்கந்தோர்கள் வழக்கம்போல் தபால் பைகளை அனுப்புவதா என்பதுபற்றியும் நேற்று நண்பகல்வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ லொறிமூலம் தபால்சேவை நடக்குமாம்

யாழ்ப்பாணம்,புதன் யாழ்ப்பாணம் தபால் கந்தோரிலிருந்துநேற்று தபால் பைகள்அனுப்பப்படவில்லை. வழக்கம்போல் பஸ்ஸில் அனுப்பப்படும் தபால் பைகள் யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் பொறுப்பேற்று வைக்கப்படும்.

யாழ்ப்பாணம் தபால் கந்தோர் அதிபர் ஏ.ஈ.ஜே. [illegible] இராணுவ லொறிகள் மூலம் தபால் பைகள் கொழும்பிற்குக் கொண்டு வரப்படுமென்றும் தபால் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்

இதே லொறிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து இரு நாட்கள் கட்டிய தபால்பைகள் அநுராதபுரத்திற்கு அனுப்பப்படுமென்றும் அவர்தெரிவித்தார்

## அவசிய தேவைக்கு சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்தே 2000 பேர் வேலைக்குத் திரும்பினர் என்று அகில ராஜா ஆகியோர் வேலைநிறுத்த நிலைபற்றிப் பேசினர்.

ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு, திருமலை, கண்டி, அனுராதபுரம் ஆகியஇடங்களுக்குச் செல்லும் இ. போ. ச. பஸ்களில் எவரும் அனுராதபுரம் வரை செல்லலாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் இ. போ. ச. பஸ்கள் அனுராதபுரம் சென்றடைந்த அரை மணி நேரத்தில் அனுராதபுரத்திலிருந்து கொழும்பு செல்ல பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரம் செல்ல 3ரூபா 35 சதமும் அனுராாதபுரத்திலிந்து கொழும்பு செல்ல 3ரூபா 50சதமும் பஸ் கட்டணமாக அறவிடப்படுகின்றது. (கா. நி)

பெறுமா ஆட்சிமன்றம் கலைக்கப்படுமா என்பது பற்றி திட்டவட்டமாக அறிவிக்க செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

வழக்கம்போல பஸ்ஸில் அனுப்பப்படும் தபால் பைகள் யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் பொறுப்பேற்று வைக்கப்படும்.

யாழ்ப்பாணம் தபால் கந்தோர் அதிபர் ஏ. ஈ. ஜே. பெனடிக்ற் மேற்கண்டவாறு நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இன்றுகாலை கொழும்பிலிருந்துஇராணுவலொறிமூலம் தபால் அநுராதபுரத்திற்கு கொண்டு வரப்படுமென்றும் அங்கிருந்து யாழ்ப்பாணத்

யாழ் கிறிஸ்மஸ் விழாவில்

## நான்கு தூதராலயங்களின் திரைப்படக்காட்சியும் நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன் இம்மாதம் 22-ம், 23-ம், 24-ம் திகதி ஆகிய மூன்று தினங்களிலும் யாழ். நகரில் நடைபெறவிருக்கும் "கிறிஸ்மஸ் விழாவில்" திரைப்படக் காட்சி முக்கியமான அம்சமாக நடைபெறவிருக்கின்றது.

முதல் நாள் விழாவில் வட பகுதியைச் சேர்ந்த பதினான்கு கிறிஸ்தவ, கத்தோலிக்க பாடசாலைகள் நிகழ்ச்சிகள் அளிக்கும். தீப அலங்கார கீத நிகழ்ச்சி முதல் நாள் நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக இருக்கும்.

இரண்டாம் நாள் விழாவில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கன்னியாஸ்திரிமடம், அச்சுவேலி சென். திரேசா மகாவித்தியாலயம் ஆகியன அளிக்கும் 'பாண்ட்' இசை மிக்கிய மானதாக விருக்கும்.

கடைசி நாளான 24-ம் திகதிதிரைப்படவிழா நடைபெறும். உலகின் இப்போது பல இடங்களிலும் நடைபெற்ற கிறிஸ்மஸ் காட்சிகள் கத்தோலிக்க கிறிஸ்தவ விழாக்காட்சிகள் காட்டப்படும். இத்தாலி, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நான்கு நாடுகளின் தூதராலயங்களும் இப்படக் காட்சியைக் காட்டுகின்றன

யாழ். திறந்த வெளியரங்கில் மூன்று நாட்கள் நடைபெறும். இவ்விழாவுக்கான ஒழுங்குகளை பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையிலான குழு கவனித்து வருகின்றது. (கா. நி.)

## ரூபா 250 அபராதம்

மட்டுவில், புதன்

264 கிறேன் கஞ்சாவை வைத்திருந்த ஒரு வடுக்குச் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா ரூபா 250 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்

இந்த வழக்கில் சாவகச்சேரி மார்க்கெட் பகுதியைச் சேர்ந்த மீரான் சாய்பு அப்துல்லா என்பவர்மீதுகுற்றஞ் சாட்டப்பட்டுள்ளது

## 'தமிழரசு மீது சிங்களவர் மதிப்புவைத்திருக்கின்றனர்?

அல்லைப்பிட்டி, செவ்.

"தமிழர்களின் முழு உரிமைகளையும் பெறுவதற்கு தமிழரசுக்கட்சியே அயராது உழைத்து வருகின்றதென்பதை தமிழ்மக்கள் நன்கு அறிவார்கள். அன்றும் இன்றும் தமிழரசுக்கட்சி மீது சிங்கள மக்கள் பெருமதிப்பு வைத்திருக்கின்றார்கள் அதனாலே தமிழர்களுக்கு ஒடுவாறு உரிமைகள் கிடைத்து வருகிறது"

இவ்வாறு வேலணை முதலாம் வட்டாரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. பொன். தம்பு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் மேலும் பேசுகையில், தமிழர் சமுதாயம் ஒரு முன்னேற்றமான பாதையில் செல்ல தமிழ்பேசும் இளைஞர்கள் அயராது உழைக்க வேண்டும். தமிழ்ப்பிரதேசம் மற்றைய பகுதிகளைவிட ஒரு பின்தங்கிய இடமாக இருப்பதற்கு மூலகாரணம் நம்மிடையேஉள்ள ஒற்றுமைக்குறைவுதான். தமிழ் மக்கள் ஒன்றுபட்டு உழைப்பதன்மூலம் வளமான வாழ்வைத் தேடிக்கொள்ள முடியும் என்றார்.

கிரிக்கெட்

## இந்தியா வெற்றி

புதுடில்லி, டிச. 2

இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையில் புதுடில்லியில்நடைபெற்ற மூன்றுவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இன்று இந்தியா 7விக்கெட்டால் வெற்றி பெற்றது. இன்று காலையில் ஆட்டம் மிகவும் மெதுவாக ஆரம்பமாகியது. மாலை மூன்று மணிக்கு முன்பதாகவே மூன்று விக்கட்டுகளை இழந்து இந்தியா வெற்றி பெற்றது, இந்தியா வெற்றி பெறும் தறுவாயில் விஸ்வனாத்தும்வாடேகரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள் விஸ்வனாத் வெற்றிக்கானகடைசி ஸ்கோரை எடுத்தார்,

## அவசிய தேவைக்கு சேவை

கோட்டை, புதன்

புகையிரதப்பகுதி அவசிய தேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவை நடத்திவருவதாக புகையிரதப்பகுதி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எண்ணை முதலிய அத்தியாவசியப் பொருட்களை கொண்டுசெல்வதற்கும் வசதியாயின் அவசரமாகச் செல்லவேண்டிய பிரயாணிகளை ஏற்றிச்செல்வதற்குமே இச் சேவை பயன்படுத்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நீண்டதூர பயணங்கள் இப்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

### பூரண வெற்றி

தமது வேலைநிறுத்தம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் தாம் பூரண வெற்றிபெற்றுள்ளதாக அறிவித்துள்ளன.

## பெங்களூர் வென்றது

யாழ்ப்பாணம், புதன்

யாழ். விளையாட்டரங்கில் நேற்று யாழ்ப்பாண தெரிவுக் கோஷ்டிக்கும் பெங்களூர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற விறுவிறுப்பான உதைபந்தாட்டப்போட்டியில் பெங்களூர் கோஷ்டி 3-0 கோல்களால் வெற்றி பெற்றது.

திரு. முத்துகிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## அமைச்சர் சமர்ப்பிப்பார்

கோட்டை, புதன்

மாநகரசபை கட்டளை சட்ட திருத்தமசோதா இன்று ஆட்சிமன்றத்தில் உள்ளூராட்சிஅமைச்சர் திரு ஆர் பிரேமதாசாவினால் சமர்ப்பிக்கப்படும்.

## மாதச்சம்பளம்

கோட்டை, புதன்

துறைமுக சரக்கு கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு மாதச்சம்பளம் வழங்கப்படவிருக்கிறது. இதுதற்போது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு தேசியமய சேவை அமைச்சர் திரு விஜ சுகததாசாவின் இந்த முடிவை கூட்டுத்தாபன தலைவர் தெரிவித்துள்ளார்.

# பலாலிவிமானநிலையத்தில் ஆணும்பெண்ணும் இரத்தினக் கற்களுடன் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம், புதன்

சுமார் இருபதினாயிரம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களை தமது உடம்பின் மறைவான இடத்தில் பதுக்கிவைத்து இந்தியாவுக்குக் கடத்திச்செல்ல எத்தனித்த ஒரு ஆணும் பெண்ணும் பலாலிவிமான நிலையத்தில் நடைபெற்ற பலத்த சோதனையின் பின்னர் அகப்பட்டனர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கிடைத்த ஒரு தகவலைத் தொடர்ந்தே அரியாலையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் சந்தேக நபர்கள் இருவரையும் பரிசோதனை செய்தபோது இருவரதும் மறைவான இடத்தில்இருந்து இரத்தினக்கற்கள் மீட்கப்பட்டனவாம்.

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் வசிக்கும் சுருட்டுத்தொழிலாளி ஒருவரிடமிருந்தும், அதே வீதியில் வசிக்கும் பால்வியாபாரி ஒருவரது மனைவியிடமிருந்தும் பெறுமதிவாய்ந்த 543 இரத்தினக் கற்கள் கண்டு பிடிக்கப்பட்டனவாம்.

ஆணிடமிருந்து ஒரு தகரடப்பிக்குள் வைக்கப்பட்டு பலூனல் மூடப்பட்டு ஒழித்துவைக்கப்பட்ட 125 இரத்தினக் கற்களும், பெண்ணிடமிருந்து 3 தகர டப்பிக்குள் வைக்கப்பட்டு பலூனல் மூடப்பட்டு ஒழித்துவைக்கப்பட்ட 418 இரத்தினக்கற்களும்சுங்கப்பரிசோதனையில் மீட்கப்பட்டன.

இது சம்பந்தமாக விசாரணை நடாத்திய யாழ்ப்பாணம் கச்சேரி உதவியாளர் திரு. கா. கந்தசாமி இரத்தினக் கற்களைப் பறிமுதல் செய்ததோடு இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார் (கா-நி)

## மரண அறிவித்தல்

### விஞசித்தம்பி—குமாரசுவாமி

ருக்மணியின் அன்புக் கணவரும், டாக்டர் திருமதி பரமேஸ் துரையப்பா, திருமதி புவனம் பத்மநாதன், மகேந்திரன். [கடற்றொழில் கூட்டுத்தாபன என்ஜினியர்], திருமதி புஸ்பம் சோமஸ்காந்தன் [கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியை], டாக்டர் விஜேந்திரன் [யாழ். ஆஸ்பத்திரி], சிவேந்திரன் (பேராதனை பல்கலைக்கழகம்), செல்வி பத்மா (சட்டக்கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி ஏ. இராசையாவின் சகோதரரும், யாழ்ப்பாணம் முன்னாள் எம். பி. யும், முன்னாள்மேயருமான வழக்கறிஞர்அல்பிரட் துரையப்பா, டாக்டர் பத்மநாதன்(புருணி), வழக்கறிஞர் கே. சோமஸ்காந்தன், உஷா ஆகியோரின்மாமனாரும் ஏ. இராசையா, ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. எம். பி, வண. பிதா. ஜி. பாலசுந்தரம், திருமதி ஸ்பென்சர் இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனருமான இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா என்ஜினியர் வி. குமாரசுவாமி காலமானார். பூதவுடல் ஈமக்கிரியைக்காக இம்மாதம் 4-ம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சுண்டுக்குளி விதானை ஒழுங்கையிலுள்ள இல்லத்திலிருந்து கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

1853

## வேலையற்றவாலிபர் சம்மேளனம் உதயம்

யாழ்ப்பாணம், புதன்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்ட வேலையற்ற வாலிபர் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவரும் ஒரு தொகுதியில் போட்டியிடுவார்.

நேற்றுமுன்தினம் மாலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட மேற்படி சம்மேளனத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ். மலாயா கபே மேல் மாடியில் இக்கூட்டம் நடைபெற்றது. வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், ஈழத் தமிழ் இளைஞர் இயக்கம், படித்த வேலையற்ற முஸ்லிம் வாலிபர் சங்கம், தீவுப்பகுதி வாலிபர் முன்னேற்றச் சங்கம், யாழ். மாவட்ட வேலையற்ற வாலிபர் சங்கம், இஸ்லாம் சோஷலிஸவாலிபமுன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பிரித்தானியாவில் இருப்பதுபோல வேலை கொடு இன்றேல் வேதனம்கொடு என்ற சுலோகத்தின்கீழ் போராடுவது, அரசாங்கத்திற்கு உணர்த்துவதற்கும், வெகுஜன ஆதரவை வென்றெடுப்பதற்கும், ஊர்வலங்கள் நடாத்துவது. சுவரொட்டிகள் மூலமும் கூட்டங்கள் கருத்தரங்குகள் மூலமும் பிரசாரம் செய்வது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க

தமிழர்களின் விழா!

தனிப்பெரும் திருவிழா!

பொங்கல் விழா!

தமிழர்களின் தினசரி! தரமுயர்ந்த தினசரி!

"ஈழநாடு"

நடத்தும்

பொங்கல் கலைவிழா!

இடம்: பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், கொழும்பு.

நாள்: பொங்கல் நன்னாள் ஜனவரி 14 மாலை.

விபரங்களுக்கு: தொடர்ந்து 'ஈழநாடு' பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு. 1969டிசம்பர் பரீட்சை G. C. E. (O/L) சரித்திர பாட வழிகாட்டிவினு-விடை இரண்டாம் பகுதி: விலை 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1573

### தேவை

இரும்புச் சாமான்களிலும் பெயின்ற் வியாபாரத்தில் ஐந்து வருட காலத்துக்கு மேல் தேர்ச்சியுள்ள ஒருவர் தேவை. கூடிய தேர்ச்சி உள்ளவருக்கு கூடிய வேதனம் கொடுப்போம். முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நேரில் விண்ணப்பிக்கவும். சூரியப்பிரகாஸ் காட்வெயர்ஸ்ரோர்ஸ், வெலிங்டன் தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம். 1584

## மாணவர் விருந்து

சுழிபுரம். செவ்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மேல் வகுப்பு மாணவர்களின் வருடாந்த விருந்து வைபவம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வடபகுதி கல்வி அதிகாரி திருமதி பாமர் கலந்து கொண்டார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 3—12—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிபதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்

## ஏல விற்பனை

சிகறெற் போறணை அலுமேனிய தகடுகள் 7-12-69 காலை 10-00 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்.

வே. சுந்தரம்,
தலைவர்,
சிகறெற் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்,
நீர்வேலி.

1852

## கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம்

### உயர்தரப் பயிற்சி

2-1-1970 — 30-9-1970

மேற்படி பயிற்சி தமிழ் மொழி மூலம் யாழ் கூட்டுறவுக்கல்லூரியில் நடைபெறும்.

தகைமைகள்:

1. சாதாரணபிரிவுகூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளுக்கேனும் கூட்டுறவுச் சங்கங்களிற் பணியாற்றுபவர்கள்.

அல்லது

2. பொதுக் கல்வித் தராதரப் பத்திரத்தில் (சாதாரணம்) எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது கணக்குப் பதிவியலிற் சித்தியடைந்து உயர் கல்லூரித் தராதரப்பத்திரம் (H. S. C.) அல்லது உயர் பிரிவுப் பொதுக் கல்வித் தராதரப்பத்திரம் (G. C. E. Adv Level.) மூன்று பாடங்களிற் பெற்றவர்கள்.

3. சாதாரண பிரிவுக் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பரீட்சையில் முதலாம் பிரிவிற் சித்தியடைந்தவர்கள் கூட்டுறவுச் சேவையில் மூன்று ஆண்டுகள் இல்லாத இடத்தும் வகுப்பில் இருக்கும் இடங்களைப் பொறுத்துச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

விண்ணப்பபத்திரங்களைக் கடிதமூலம் பெற விரும்புவோர் சொந்த முகவரி எழுதி முத்திரை ஒட்டப்பட்ட ஒரு கடித உறையை வைத்து எழுத வேண்டும்.

விண்ணப்பங்கள் முடிவு திகதி: 15-12-1969.

க. பரமோதயன்,
அதிபர்,
யாழ். கூட்டுறவுக் கல்லூரி
யாழ்ப்பாணம்,
24-11-69. 1854

## "பாலசுப்பிரமணியம் பூங்கா"

விஸ்வமடு, செவ்வாய்

கடந்தவருடம் விவசாயப் படைக்குச் சொந்தமான வெளி ஒன்றில் சென்று விப

## 9 கோல்களால் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக்கும் சாவகச்சேரி 'றவுண்டேபின்'' விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை 9—0 கோல்களால் எதிர்க் கோஷ்டியை மிக இலகுவாகவெற்றி பெற்றது.

பரந்தன்கோஷ்டியின் முன்னணி வீரரான பென்னடிற் மிகவும் திறமையாக விளையாடி 5 கோல்களைப் போட்டார். மற்றைய வீரர்களான விகோறிஸ்- 2 சிவலிங்கம்-1 சண்முகலிங்கம்-1 ஆகியோர் முறையே கோல்களைப் போட்டனர்.

இப்போட்டிக்கு திரு யேசுதாசன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (தே. நி)

## பாதையை விட்டு பஸ்விலகியது

ஊரதீவு, செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிச் சென்று கொண்டிருந்த இ. போ. ச பஸ்ஒன்றுபாதையை விட்டுவிலகி பள்ளத்தில் பாய்ந்தது. வேறொருவாகனத்தை குறிப்பிட்ட பஸ் முந்தியபோது இவ்விபத்து நிகழ்ந்ததாகத்தெரிகிறது. மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு முன் இச்சம்பவம் நிகழ்ந்தது. உயிர்ச்சேதமெதுவுமில்லை.

## இவர்கள் பரிசு பெறுகின்றனர்

சுழிபுரம், செவ்வாய்

வழக்கம்பரை சன சமூக நிலைய பஜனைச் சபயினர் நடாத்திய சமய அறிவு எழுத்துப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் விபரம் வருமாறு:-

சி. சிவசக்தி, செ. தவராசா, தா. புவனேஸ்வரி, கே. காந்திமதி, இ. சந்திரன் கோ. யோகேஸ்வரி, வ. ஸ்ரீகாந்தன் ம. ரேணுகா.

த. இளங்கோதாசன், ச. கயிலாயநாதன், ச. தபந்திராதேவி, ச. கந்தசாமி, சி. தவமணிதேவி, ந. புஷ்பமாலா, ச. சந்திரா, க. ஞானமதி, பொ. இராசநாயகி, ந. மகாலிங்கம், ந. தேவகல்யாணி. கி. இராசேந்திரன், கு. கமலாம்பாள் ஆகியோர் ஆறுதல் பரிசுபெறுகின்றனர்.

## நேரடி நடவடிக்கை: இ. போ. ச. ஊழியர் எச்சரிக்கை

சுழிபுரம், செவ்வாய்

''அத்தியாவசியமான வசதிகளின்றி நாம் மிகவும் கஷ்டப்படுகிறோம். இந்த வசதிக் குறைகள் காரணமாக நாங்கள் பொதுமக்களுக்குச் செய்யும் சேவைகள் கூட சில சமயங்களில் குறைபாடுடையதாக இருந்திருக்கக் கூடும். இந்தத் தேவைகளைப் பெறுவதற்கு ஒரு போராட்டம் நடாத்த வேண்டியது அவசியமல்ல என்பதுதான் எங்களது கருத்து, ஆனால் இரண்டு வருடங்களுக்கு மேலாக வேண்டிய அவகாசம் இருந்தும் இவை புறக்கணிக்கப்பட்டு வருவதால் எங்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டம் காரணமாக எதுவித நடவடிக்கையின் மூலமாவது இவற்றைப்பெற வேண்டிய நிலைக்குள்ளாகியிருக்கிறோம்''.

இ. போ ச. காரைநகர் டிப்போ ஊழியர் கூட்டுமுன்னணிச் செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

பொது மக்களுக்காக வெளியிட்டுள்ள இவ் வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''எமது கோரிக்கைகளில் முக்கியமாக மழைகாலத்திற்கு அவசியமானவைகளும் உண்டு நாங்கள் சம்பள உயர்வு அல்லது நியாயமற்ற கோரிக்கை எதுவும் சமர்ப்பிக்கவில்லை. நாங்கள் கேட்கும் தேவைகளாவன என்னேரமும் சேவையிலீடுபடுத்தக் கூடியதான நல்ல பஸ் வண்டிகள், ஊழியர்களின் பாவனைக்குரிய தண்ணீர், மலகூடம், தங்குமிடவசதி, மற்றும் ஊழியர்களுக்கென சபையால் ஏற்படுத்தப்பட்டுள்ள நலன்புரிசேவைப் பகுதியின் சேவை, முதலியனவாகும் ஆகவே நாங்கள் இவற்றைத் பெறுவதற்காக ஏதாவது நடவடிக்கையில் இறங்க வேண்டி ஏற்பட்டு அதனால் உங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்''.

## "எம். பி. பதவியையும் ராஜினமாசெய்ய தயங்கேன்"

— வி. நவரத்தினம்

அல்லைப்பிட்டி, செவ்

'தென்னிலங்கை மக்கள் வரும் பொதுத் தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியின் முடிவைப்பற்றி அறிவதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுகின்றார்கள். அவர்கள் தீவுப்பகுதி மக்கள் எப்படிப்பட்டவர்கள் தன்மான உணர்ச்சி உடையவர்கள் தானா என்பதை அறிவதற்கு காத்திருக்கின்றார்கள். நான் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய பின் நீங்கள் விரும்பினால் எனது எம். பி. பதவியையும் ராஜினமாச் செய்ய தயங்கமாட்டேன்,'

மேற்கண்டவாறு வேலணையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தீவுப் பகுதி ஆட்சிமன்ற உறுப்பினரும் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவருமாகிய திரு. வ. நவரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. க. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் மேலும் பேசுகையில் தமிழ்மக்கள் இனிமேல் நம்பிவந்த கட்சியை நம்பத் தயாராகவில்லை. அவர்களின் அம்பலமெல்லாம் டட்லியின் அரசாங்கத்துடன் சேர்ந்ததும் வெளியாகிவிட்டது. அதுமட்டுமல்ல அவர்கள் மலைநாட்டுத் தமிழரையும் புறக்கணித்துவிட்டனர் என்றும் கூறினர்.

## 'புதிய அதிபரை நியமிக்குக்'

சுழிபுரம், செவ்

சுழிபுரம் [illegible] ரிக்க மிஷன் [illegible] வெ[illegible]ரைச் சேரந்த ஒரு புதிய தலைமையாசிரியரை

## கைதானவர் பிணையில்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி கொட்டடி வீதிச் சந்தியில் 8 தினங்களுக்கு முன்னர் துரைராஜா என்பவர் வெட்டப்பட்டது சம்பந்தமாக புவனேந்திரன் என்பவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது[illegible] தனர்.

சந்தேகநபர் யாழ். மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட பின்னர் அவரை பிணையில் செல்ல மாஜிஸ்தி[illegible] ஜனப் ஜமீல் உத்தர[illegible]

## 'குறுக்கு வழியில்லை' இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, டிச. 2

'ஏழைகள் நன்மையடைவதற்காகப் பணக்காரர்கள் மீது புதிய வரிகள் விதிக்கப்படலாம். சோஷலிஸசமுதாயம் அடைவதற்குக் குறுக்கு வழி ஏதுமில்லை. நாட்டுமக்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டுமென்பது எளிதான செயல் அல்ல'

மேற்கண்டவாறு புதுடில்லியில் தனது வாசஸ்தலத்தின்முன், தமக்கு ஆதரவு தெரிவித்துவந்த சுமார் 5000 ஆசிரியர்கள் மத்தியில் பேசிய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

## வேலணையில் சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், புதன்

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் சிறுவர் சித்திரக்காட்சி இம்மாதம் 6-ம், 7-ம் திகதிகளில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

6-ம் திகதி மாலை வடமாநில சித்திரவித்தியாதரிசி கலாகேசரி ஆ. தம்பித்துரை இக்கண்காட்சியை திறந்து வைப்பார். (கா. நி.)

சுழிபுரம், செவ்வாய்

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை இறுதி ஆண்டுக்கான ஆசிரியர்களுககான வருடாந்த விருந்துவைபவம் கலாசாலை மண்டபத்தில் அதிபர் எஸ. விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராக வடபகுதி கல்விஉதவிவித்தியாதிபதி எஸ். தணிகாசலம் கலந்துகொண்டார்.

## குப்பிளான் கொலை வழக்கு: சுப்ரீம்கோர்ட்டுக்கு பாரம்

மல்லாகம், செவ்

குப்பிளான் கொலைவழக்கு விசாரணை முடிவில் உயர் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி எதிரியைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு உயர் நீதிமன்ற விசாரணைக்கு நிற்குமாறும் தீர்ப்பளித்துள்ளார்.

குப்பிழானைச் சேர்ந்த எஸ் அருணசலம் என்ற வாலிபர் மீது அதேபிடத்தைச் சேர்ந்த இளையதம்பி ஆறுமுகம் என்பவரைக் கல்லால் தாக்கிக் கொலைசெய்ததாகச் சுன்னாகம் பொலிஸாரால் இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## வடபகுதியில் வானொலி லைசென்ஸ் பரிசோதனை

யாழ்ப்பாணம், புதன்

வானொலிபெட்டி லைசென்ஸை பரிசோதனை செய்வதற்காக இன்றுமுதல் தொலைதொடர்பு காரியாலய ஊழியர்கள் வடமாகாணத்தில் பகுதி பகுதியாகச்செல்வார்கள்.

வானொலி பெட்டி லைசென்ஸை வானொலிபெட்டியை வைத்திருப்போர்கள் பரிசோதனைக்கு வரும் ஊழியர்களுக்கு காட்ட தயாராக வைத்திருக்க வேண்டுமென்றும் லைசென்ஸ் வைத்திராதவர்களுககு 1000 ரூபா அபராதம் விதிக்கப்படுமென தொலை தொடர்பு காரியால அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரிசோதனைக்கு செல்லும் இடங்களின் விபரம்:-இன்று வதிரி, புத்தூர் பகுதிகளுக்கும். 4-ம், 5-ம்தேதி அல்வாய் ஆவரங்கால் பகுதிகளுக்கும் செல்வார்கள். 6-ம் தேதி காங்கேசன்துறை, உரும்பராய், 9-ம், 10-ம்தேதி மாதகல் சாவகச்சேரி, 13-ம், 14-ம்தேதி கொடிகாமம் 17-ம், 18-ம், 19 ம்தேதி ஆனையிறவு, எழுவைதீவு, 20-ம் 21-ம் தேதி புலோற்பளை, மார்த்தனை, 24-ம்தேதி சுன்னாகம், இருபாலை, 26-ம்தேதி மல்லாகம், 26-ம், 27-ம், 28-ம்தேதி மாங்குளம்.

### அடுத்த நடவடிக்கை பற்றி ஆலோசனை

யாழ்ப்பாணம், புதன்

உள்ளூராட்சிசேவை ஊழியர்கள் திருத்தியமைக்கப்பட்ட சம்பள உயர்வை பெறுவதற்கு என்ன நடவடிக்கையெடுப்பதென்பது பற்றிஆலோசனைசெய்யஜன நாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க நிர்வாக கமிட்டி விரைவில் கூடவிருக்கிறது. இதுசம்பந்தமாக உள்ளூராட்சி மந்திரிக்கு சங்க காரியதரிசி ஏற்கனவே தந்தியொன்றை அனுப்பியுள்ளார். அமைச்சின் சுற்றறிக்கையின் படி ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கும்படி உள்ளூராட்சி நிர்வாகத்தினருக்கு உத்தரவிடும்படி அத் தந்தியில் கூறப்பட்டுள்ளது.

பீடைகள், களைகளிடமிருந்து உங்கள் நெற்பயிரைக் காப்பாற்றுங்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர [illegible]னம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 அஸான்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வீணை, 7-35 பாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-0[illegible] [illegible]ம ஸ் லிம்நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## "பாலசுப்பிரமணியம் பூங்கா"

விஸ்வமடு, செவ்வாய்

கடந்தவருடம் விவசாயப் படைக்குச் சொந்தமான லொறி ஒன்றில் சென்று விபத்தில் சிக்கி இன்னமும் வேலை செய்யமுடியாமல் இருக்கும் வீரர் செ பாலசுப்பிரமணியத்தின் ஞாபகார்த்தமாக இவ்வீரர் விஸ்வமடு விவசாயப்படையில் கடமை புரிந்த காலத்தில் தங்கியிருந்த 6-ம் இல்லத்திற்கு "பாலசுப்பிரமணியம்பூங்கா" எனபெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பெயர் சூட்டு விழாவிற்கு திரு. எம். கந்தப்பிள்ளை தலைமைவகித்தார்.

ந. மகாலிங்கம், ந. தேவகல்யாணி. கி. இராசேந்திரன், சூ. கமலாம்பாள் ஆகியோர் ஆறுதல் பரிசுபெறுகின்றனர்.

## [illegible] நியமிக்குக'

சுழிபுரம், செவ்

சுழிபுரம் கிழக்கு அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு வெ[illegible]ரைச் சேரந்த ஒரு புதிய தலைமையாசிரியரை நியமிக்குமாறு பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் தற்காலிக தலைமையாசிரியர் திரு. வே. சரவணமுத்ன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

தீர்மானத்தின் பிரதிகள் கல்விப்பகுதி அதிகாரிகளுக்கும் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

தனர்.

சந்தேகநபர் யாழ். மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட பின்னர் அவரை பிணையில் செல்ல மாஜிஸ்தி[illegible] ஜனுப் ஜமீல் உத்தரவிட்டார். காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றார். (கா. நி.)

## கலை விழா

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 8-ம் திகதி உரும்பராய் ஆலய முன்றலில் பிதா நீ. சவரிமுத்து தலைமையில் ஓர் கலைவிழா நடைபெறும்.


**ராணி** (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜஞ நடித்த

# குலவிளக்கு

இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி.

பிரிபோயா, போயா 4 காட்சிகள்

★ ரவிச்சந்திரன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
★ சோ
★ ஆனந்தன்
★ குமாரி சச்சு
★ மனோரமா
★ தேவகி

நடித்த

முக்தா பிலிம்ஸாரின்

# நினைவில் நின்றவள்

இசை வி. குமார் | கதைவசனம் சோ | டைரக்ஷன் வி சீனிவாசன்

**வெஸ்லி சினிமா**

மானிப்பாய்

தினசரி: 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30 மணி

எம். ஆர். ராதா-எஸ். எஸ். ஆர் நடித்த

**இரத்தக்கண்ணீர்**

[புதிய கொப்பி]

**ஸ்ரீகாலிங்கன்**

இணுவில்

தினசரி 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30 மணி

நடித்த

ஜெய்சங்கர் விஜயலட்சுமி

**அன்பு வழி**

**ராஜா** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்-விஜயகுமாரி முத்துராமன்-வாணிஸ்ரீ நடித்த

**டீச்சரம்மா**

மாதர்களுக்கு அரைக்கட்டணம்

**வின்ஸர்**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

தென்னகத் திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்

**எதிர் நீச்சல்**

**மனோகரா**

யாழ்ப்பாணம்

தினசரி 6-30 10-00

காமினி பொன்சேகா ருக்மணி தேவி, ஜயகாந்த்

**பாராவலலு**

சிறந்த சிங்களச் சித்திரம்

வல்வெட்டித்துறை

**றஞ்சனா தியேட்டர்**

Daily: 6-30&9-30p.m.

EUROPE BY NIGHT

(Adults only)

**REGAL** JAFFNA

Daily 4-45, 7, & 9-45 p.m.

Poya, Pre-poya 4 Shows

Richard Widmark, Inger Stevens

in

MADIGAN

(Adults Only)


# இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

கார்த்திகை மாதம் 18-ம் திகதி (3-12-69)

**மேஷம்**- நம்பிக்கை மோசடி நடக்கும் எதிர்பார்க்கும் வர்வுகளில் தடைஏற்படும். குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும். கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரியைச் சாம்பாதித்துக் கொள்ளுவீர்கள்.

**ரிஷிபம்**- பிதாவழி மூலம் பெருமைதரும் சம்பவங்கள் இடம்பெறும். பெரியோர்கள் சகவாசத்தால் மதிப்பு உயரும் செயலாற்றுவதில் புதிய உற்சாகம் பிறக்கும், சிலர் வாழ்க்கையில் பொருள் வரவுக்கும் இடமுண்டு.

**மிதுனம்**- தொழில்துறையில் புதிய வெற்றிகள்கிடைக்கும், மேலதிகாரிகளின் ஆதரவை தாராளமாகப் பெறுவீர்கள். சகதொழிலாளர்கள் மத்தியில் ஆதரவு பெருகும். குடும்பத்திலும் இனிமையான சம்பவங்கள் உண்டு.

**கடகம்**- பண வருவாயில் நல்ல திருப்பம் ஏற்படும். விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும். சிலர் உல்லாசப் பயணம் ஒன்றுக்கும் திட்டமிடுவார்கள், புத்திரர்களால் பெருமைக்கும் இடமுண்டு.

**சிம்மம்**- சிறிய விடயத்துக்குகூட அதிக ஆத்திரம் ஏற்படலாம். பல வழிகளிலும் பணம் செலவாகும். நண்பர் ஒருவர் உம்மை ஏமாற்றுவதற்கு முனைவார். சிலர் அவப்பெயருக்கும் இலக்காகலாம்.

**கன்னி**- அவசர முடிவின்மூலம் ஆபத்தை விலை கொடுத்து வாங்குவீர்கள். மனதில் அமைதி குன்றும். அயலவர்களின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும். அடக்கம் விரும்பத்தக்கது.

**துலாம்**- இல்லம் இன்று கட்டிவெல்லம்போல் இனிக்கும், இனிய வார்த்தைகளின் மூலம் மற்றவர்களைக்கவர்ந்து கொள்ளுவீர்கள். பொருள்துறையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. சுபதினம்.

**விருச்சிகம்**- முன்னேற்றப்பாதையில் தடைகள் உருவாகும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாகவிருக்கும். உள் வீட்டிலேயே பூசல்கள் அதிகரிக்கும் சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். சுகாதாரம் நன்று.

**தனுசு**- வாகனச் சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம், வரவிலும் திருப்தி காணப்படுகிறது. தாய்வழி மூலம் சிலருக்கு தனலாபம் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளுக்கும் இடமேற்படும்.

**மகரம்**- உள்ளம் இன்பத்தால் துள்ளும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும். நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும். இடமுண்டு. பிள்ளையொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்.

**கும்பம்**- கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும். முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தை முறியடிப்பதற்கு சிலர் முனைவார்கள். அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவோர் அவதானம் செலுத்தவும்.

**மீனம்**- காதலர்களுக்கு கற்கண்டான தினம். குடும்பஸ்தர்களின் வாழ்வில் குதூகலம் தென்படும் உறவினர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். பெற்றோர்களின் ஆசியும் தப்பாமல் கிட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னுபிரிக்கா மீது நடவடிக்கை எடுக்க பாதுகாப்பு சபைக்கு உத்தரவு

## ஐ. நா. பாதுகாப்பு சபை தீர்மானம்

நியூயோர்க், டிச. 2 தென்னுபிரிக்கா மீது நடவடிக்கை எடுக்கும்படி ஐ.நா. மகாசபை, பாதுகாப்புச் சபையை ஒரு தீர்மானம் மூலம் கேட்டிருக்கின்றது.

தென்மேற்கு ஆபிரிக்காவிலிருந்து தென்னுபிரிக்காவை வெளியேறச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கோரும் இந்தத் தீர்மானத்தை 92 நாடுகள் ஆதரித்தன. இரண்டு நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 19 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

தென் மேற்காசியாவில் தென்னுபிரிக்கா தன்வசம் வைத்திருக்கும் பிரதேசங்களைக் கைவிட்டு வெளியேறும்படி ஐ. நா. விடுத்த கோரிக்கைகளை அந்த நாடு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது இதனுல் அந்த நாட்டைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் சமீபத்தில் ஐ.நா. மகாசபையில் நிறைவேற்றப்பட்டது.

தென்னுபிரிக்கா மீது நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆசிய ஆபிரிக்க நாடுகள் தாக்கல்செய்திருந்தன. தென்மேற்காசியாவில், தென்னுபிரிக்கா தன்வசம் வைத்திருக்கும் பிரதேசங்களை ஐ.நா.விடம் கையளித்துவிட்டு வெளியேறவேண்டுமென்று ஐ. நா. மகாசபை ஏற்கனவே கேட்டிருக்கின்றது.


## பூட்டோ மீது கொலை முயற்சி

கராச்சி, டிச. 2 முன்னுள் வெளிநாட்டமைச்சர் திரு. சுல்பிகார் அலிபுட்டோ நேற்றுமுன்தினம் மேற்கு பாகிஸ்தானில் அரசியல் பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தபொழுது கொலைமுயற்சியொன்றிலிருந்து மயிரிழையில் தப்பியதாகக் கூறப்படுகிறது

பூட்டோ சென்ற கார் மீது கற்களைவீசி 40 பேர் குழப்பம் செய்தார்கள் என்றும் பூட்டோவுடன் சென்ற 4 பேர் காயமடைந்தார்கள் என்றும் பூட்டோவின் சகாக்களில் ஒருவர் கூறினுர். பூட்டோவைக் கொலை செய்வதற்காக எடுக்கபபட்ட முயற்சி இதுஎன்று அவர்மேலும் குறிப்பிட்டார்.

திரு பூட்டோ இதுபற்றி பின்னர் குறிப்பிடுகையில் மதத்தின்பேரால் மக்களைச் சுரண்டும் ஒரு கட்சியினுல் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக்கூறினுர். ஆனுல் அந்தக்கட்சியின் பெயரை அவர் வெளியிடவில்லை.

## ட்ராக்டர் விற்பனைக்கு கிளிநொச்சியில் ஒரு கிளை



யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தினர் டேவிட் பிரவுண் ட்ராக்டர் விற்பனை செய்யவும் திருத்துவதற்கும் கிளிநொச்சியில் ஒரு மேலதிக கிளை அண்மையில் திறக்கப்பட்டது. ரூேலண்ட்ஸ் ஸ்தாபனத்தின் தலைவரான திரு. ரி. சிறீ இராமநாதன் இந்தக்கிளை ஸ்தாபனத்தை திறந்து வைத்தார். அவருடன் ரூேலண்ட்ஸ் ஸ்தாபனத்தாரின் நிர்வாகஸ்தர்களான திரு.ஒஸ்றின், திரு. றஞ்சிற் கனகரட்ன, திரு டியூட்ரூேம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

திரு. சிறீ இராமநாதன் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தினரின் ஆதரவை வரவேற்று பேசுகையில் ரூேலண்ட்ஸ் ஸ்தாபனம் கிளிநொச்சி, பரந்தன்பகுதி மக்களுக்கு சகல விதத்திலும் உதவி செய்வதற்கு தயாராயிருப்பதாக தெரிவித்தார். அவ்வூர் இளைஞர்களுக்கு தங்கள் விவசாய உபகரணங்களை உபயோகிக்கும் முறைகளை கற்றுத்தரவும் முன்வருவதாக உறுதி கூறினுர்.

மேலதிக அரசங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் திரு. இராமநாதன் கிளிநொச்சிப்பகுதி இளைஞர்களுக்கு விவசாயத்தில் உபயோகிக்கும் முறையைப் பயிற்றுவதற்கு முன்வந்தமைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சில விவசாயிகள் சொந்தமாக ட்ராக்டர்களை வாங்கும் தகுதியற்றவர்களாயிருப்பதால் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தினர் விவசாயிகளுக்கு ட்ராக்டர்களை வாடகைக்குத்தர ஏற்பாடு செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

திரு. பி. மாணிக்கவாசகர். டீ. ஏ. ஈ. ஓ. பேசுகையில் நவீனவிஞ்ஞான உதவியால் விவசாயத்தை விருத்தி செய்யமுடியும் எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத் தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம், திரு. இராமநாதனும் அவரது சக நிர்வாகிகளும்வந்து இவ்விழாவைச் சிறப்பித்தமைக்கு நன்றி தெரிவித்ததோடு மற்றும் விழாவில் கலந்துகொண்ட யாழ். அரசாங்க அதிபர் காரியாதிகாரி, உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## இன்று நூல்வெளியீட்டு விழா

சுழிபுரம். புதன் பண்ணுகம் தெற்கைச் சேர்ந்த ஆ. சேயோன் எழுதிய 'விடுதலைவேட்கை' என்னும் நூலின் வெளியீட்டு விழா இன்றுமாலை 4மணிக்கு சுழிபுரம் கிராமசபை மண்டபத்தில் நடைபெறும். வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் இந்நூலை வெளியிட்டுவைப்பார்.

இளைப்பாறிய தந்தி இலாகாப் பொறியியலாளர் திரு. செ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பண்டிதர் ப. இராசகுரு, சு. கந்தசுவாமி ஜே. பி., புலவர் கா. வேல்முருகன், திரு. சி சிவபாக்கியநாதன், திரு. செ. ஸ்ரீனிவாசன், திரு. க. வாமதேவன் ஆகியோர் உரைநிகழ்த்துவர். இறுதியில் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும்.

— —

## நம்பிக்கை யில்லாத் தீர்மானம் தோல்வி

அல்லப்பிட்டி, செவ்வாய் அல்லைப்பிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு. செ. தவவிநாயகத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதை விசாரிப்பதற்கான விசேட கூட்டம் வடமாகாண உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. ஏ ஏ ஜோசெப் தலைமையில்நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைவரும் மற்றொரு உறுப்பினரும் சமுகமளிக்கவில்லை. மூன்று உறுப்பினர்களே சமுகமளித்து பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர். சட்டவிதிகளின்படி தலைவரைப் பதவி நீக்கம் செய்வதற்கு தேவையான மூன்றில்இரண்டுபங்கு வாக்குக் கிடைக்காததால் அவரைப் பதவியிலிருந்து நீக்கக் கொண்டுவந்த தீர்மானம் தோல்வியடைந்தது

— —

## தமிழிலும் வெளியிட நடவடிக்கை

அல்லைப்பிட்டி, செவ். உள்ளூராட்சி அமைச்சிலிருந்துகிராமசபைகளுக்கனுப்பும் சுற்றறிக்கைகள் தனிச்சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் அனுப்பப்படுவதாகவும் இதனை தமிழிலும் அனுப்பநடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மண்டை...

கேரள மார்க்ஸிய வாதிகளின்

## மறியல் இயக்கம் வன்முறையாக மாறியது

### பொலிஸ் சூட்டில் மூவர் பலியாகினர்

திருவனந்தபுரம், டிச. 2

கேரளத்தில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட்டுகள் நேற்று ஆரம்பித்த மறியல் இயக்கம்வன்முறையாக மாறியதால் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் கொல்லப்...

பொலிசார் மீது கற்களை வீசியும், வாகனங்களைப் புரட்டியும் வீடுகளுக்கு தீமூட்டியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலவரங்களில் ஈடுபட்டனர் கோழிக்கோடு, கோட்டாயம், வைக்கம் ஆகிய இடங்களிலும் வன்முறைகள் இடம்பெற்றன.

இந்தக் குழப்பங்களில் 500க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். இவர்களில் 75 பேர் பொலிசார். ராஜ்யம் முழுவதிலும்சுமார் ... பகுதிகளிலும் குழப்பங்கள் ஏற்பட்டதில் பொலிசார் தடியடிப் பிரயோகங்களும் செய்தனர். கேரளசட்டசபையைக் கூட்டுவதில் தாமதம் ஏற்படுவதைக் குறித்தும் விவசாயிகள் கொடுமைப் படுத்துவதாகக் கூறியும் இந்தமறியல் இயக்கத்தை அவர்கள் நடத்திஞர்கள்.

தமது ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக இந்த இயக்கத்தை மார்க்...

மீகொடையில்

## பிரி. உதவியுடன் பஸ் தொழிற்சாலை

கோட்டை, செவ்வாய் இலங்கை அரசாங்கமும், பிரிட்டிஷ் மோட்டார் கூட்டுத்தாபனமும் ஒன்றுசேர்ந்து மீகொடையில் நிறுவவிருக்கும் பஸ் தொழிற்சாலைக்கான அத்திவாரக்கல் நாட்டு வைபவம் இம்மாதம் 7ந் திகதி நடைபெறவிருக்கிறது. உலகின் மிகப்பெரிய மோட்டார் வாகன உற்பத்தி ஸ்தாபனமான பிரிட்டிஷ் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அதிபரான ஸ்ரோக்ஸ் பிரபு இவ்வைபவத்தில் கலந்துகொள்வார்.

கைத்தொழில், மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இப்புதிய தொழிற்சாலைக்கு அத்திவாரக்கல்லை நாட்டுவா... இலங்கை அரசாங்கமும் லேலண்ட் மோட்டார் கூட்டுத்தாபனமும் கூட்டாகச் சேர்ந்து இத்தொழிற்சாலைக்கான இயந்திரப்பொறிகளை அளிக்கவிருக்கின்றன. இந்த வைபவத்தில் கலந்துகொள்ளும் ஸ்ரோக்ஸ் பிரபு இலங்கையில் மூன்று தினங்கள்வரை தங்கியிருப்பார். அவர் இங்கு தங்கியிருக்கும்வேளை அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன, கைத்தொழில் மீன்பிடி அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜே வி. பொன்சேகா, இலங்கைப் போக்குவரத்துச்சபை அதிபர் திரு. ஏ. ஆர் பி. விஜயசேகரா, இலங்கை லேலன்ட் லிமிட்டெட்டின் அதிபர் திரு. பி. டி. ரம்பாலா, கைத்தொழில் அபிவிருத்தி அதிபர் திரு. சி. மயில்வாகனம் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார்.

"நவீன ... சாதனங்களை மக்கள் அறிய வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக மாறியதால் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் கொல்லப் பட்டார்கள். பாலக்காடு என்ற இடத்தில் இது நடைபெற்றது.

முறைகள் இடம்பெற்றன.

இந்தக் குழப்பங்களில் 500க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். இவர்களில் 75 பேர் பொலிசார். ராஜ்யம் முழுவதிலும்சுமார் 20 ஆயிரம் பேரைப் பொலிசார் கைதுசெய்தனர். பின்னர் 1500 பேரை விடுதலை செய்தனர். ராஜ்யத்தின் பல

கூறியும் இந்தமறியல் இயக்கத்தை அவர்கள் நடத்தினார்கள்.

தமது ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக இந்த இயக்கத்தை மார்க்ஸீய வாதிகள்நடத்துவதாக அரசாங்கதரப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.

# வல்லரசு மாநாடு: யு தாண்ட் வரவேற்பு

நியூயோர்க். டிச. 2

மேற்காஸியா சம்பந்தமான நான்கு வல்லரசு மாநாடு இன்று ஐக்கிய நாடுகள் கட்டிடத்தில் ஆரம்பமாகின்றது.

அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நான்கு வல்லரசுகளும் நடத்தும் இந்த மாநாட்டை யுதாண்ட் வரவேற்றிருக்கின்றார்

மேற்காஸிய நெருக்கடிக்கு அமைதியான முடிவு ஒன்றை ஏற்படுத்துவதற்காக வல்லரசுகள் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை 1967-ல் பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் அமையுமென்றும் யுதாண்ட் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா. சபையின் 24-வது மாநாடு முடிவடைவதற்கு இரு வாரங்களுக்கு முன்பதாகவே ஆரம்பமாகும் இவ்வல்லரசு மாநாட்டில் அரபு-இஸ்ரேல் தகராறுகளுக்கு முடிவுகாணக்கூடிய சாத்தியங்கள் அவ்வளவு சிறப்பாக இல்லையென்று கருதப்படுகின்றது. ஐ. நா.வுக்குள்ளேயே இந்த நாடுகளுக்குள் கருத்து ஒற்றுமை ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படவில்லை. அமெரிக்காவும், சோவியத்யூனியனும் மேற்காசிய விஷயம் விவாதிக்கப்பட்ட போதெல்லாம் ஒன்றையொன்று தாக்கிவந்துள்ளன. இந்நிலைமையில் அவைகள் தனியாகக் கூடிப்பேசுவதன் மூலம் மட்டும் உடன்பாட்டுக்கு வர முடியுமா என்று அவதானிகள் கேட்கிறார்கள்.

என்றாலும் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னர் வல்லரசு நாடுகள் ஒரு தீர்மானத்துக்கு வரக்கூடுமென்று வல்லரசு வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் கருத்து வெளியிடுகிறார்கள்.

# இந்திரா - சிண்டிகேட் கோஷ்டி மோதல்

## காங்கிரஸ் அலுவலகத்தில் பொலிஸ் காவல்

புதுடில்லி, டிச. 2

இங்குள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சி அலுவலகம் மூடி சீல் வைக்கப்பட்டதையொட்டி இருதரப்பு காங்கிரசாரிடையேயும் பெரும் மோதல் ஏற்பட்டது

சிண்டிகேட் காங்கிரஸ் பொதுக் காரியதரிசிகள் பி. வேங்கட சுப்பையா, சாவிக் அலி ஆகியோர் அலுவலகத்திற்கு வந்தபொழுது, அலுவலகத்து அறைகள் யாவும் மூடி சீல் வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் அதை உடைத்துத்திறக்க முயன்றபோது மேற்படி அலுவலகத்தைக் கைப்பற்ற முயற்சிகள் மேற்கொண்டிருக்கும் இந்திரா ஆதரவாளர்கள் அதைத்தடுக்கவே இருதரப்பினர்களுக்குமிடையில் சச்சரவு உண்டாயிற்று அதைத் தொடர்ந்து திரு. வேங்கட சுப்பையா, பொலிசுக்குப் புகார் செய்யவே, பொலிசார் உடனடியாக விரைந்து வந்தனர் அலுவலகம் முழுதும் ஒரே பொலிஸ் மயமாகவே காணப்பட்டது. அலுவலகத்தைச் சுற்றியும் பொலிஸ், காவல் போடப்பட்டது. இதை ஆட்சேபித்து ஒரு சில காங்கிரஸ் ஊழியர்கள் தரையில் உட்கார்ந்து மறியல் செய்ய, இன்னும் சிலர் 'ஒரு சில வெள்ளி நாணயங்களுக்காக உங்களை இந்திராவிடம் விற்றுவிட்டீர்களே என்று கூச்சல்போட, அவர்களும் பதிலுக்குக் கூச்சல்போடச் சிலர் பொலிஸ் பாதுகாப்பையும்மீறி உள்ளே நுழைய முயல இவ்வாறு எங்கும் ஒரே அமளி துமளியாக இருந்தது.

இச்சம்பவம் காரணமாக 8 பேர் கைது செய்யப்பட்டதுடன் அலுவலகத்தைச் சுற்றி 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது.

## சிங்கள ஆசிரியர்களை நியமிக்குக

### கி. ச. வில் தீர்மானம்

அல்லைப்பிட்டி, செவ்வாய்

நயினாதீவிலுள்ள மகாவித்தியாலயத்திலும் வேறு இரு பாடசாலைகளிலும் சிங்களம் கற்பிப்பதற்காக சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும்படி கல்விமந்திரியையும், வட மாநில கல்வி அதிகாரியையும் கேட்டுக்கொள்வதென நயினாதீவு கிராமசபையின் மாதாந்தக்கூட்டத்தில் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது

## இடமாற்றம்

சுழிபுரம், செவ்வாய்

சங்கானைக் கிராம நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. எஸ். இராசநாதன் அக்கரைப்பற்றுக் கிராம நீதிமன்றத்துக்கு அடுத்தமாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. எஸ். கிருபாகரன் சங்கானைகிராம நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சாங்கமும் லேலன்ட் மோட்டார் கூட்டுத்தாபன ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார்.

## "நவீன கருத்தடை சாதனங்களை மக்கள் அறிய வேண்டும்"

புடாபெஸ்ட், டிச 2

உலகடங்கிலும் தீவிரமாகப்பரவிவரும் கருச்சிதைவுகளை தடுக்குமுகமான கருத்தடை முறைகளைப்பற்றி ஆராய்வதற்கென கடந்த செப்டம்பரில் புடாபெஸ்டில் சர்வதேச மகாநாடு ஒன்று நடைபெற்றது.

35 நாடுகளைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களும், ஜனவிகித புள்ளிவிபர நிபுணர்களும் பிரஸ்தாப மகாநாட்டில் கலந்து கொண்டனர். ஐரோப்பா, கிழக்கு ஆபிரிக்க பிரதேசங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட இந்த மகாநாடு மூன்று தினங்கள் நடைபெற்றது

கிரீஸ், ஹங்கேரி, ருமேனியா ஆகிய மூன்று நாடுகளிலும் கருச்சிதைவுகளின் எண்ணிக்கை பயங்கரமாக அதிகரித்து உள்ளதென்ற விபரம் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது:

ஆண்டுதோறும் சுமார் ஐம்பதாயிரத்துக்கும் மேல் சட்டவிரோதமான கருச்சிதைவுகள் கிரீஸில் நடத்தப்படுவதாக பேராசிரியா வஸிலியோஸ், வலோராஸ் மகாநாட்டில் தெரிவித்தார்.

நவீன கருத்தடைச் சாதனங்களைப்பற்றி சாதாரண பொதுமக்கள் அறிந்திருக்காமையினால்தான் கருச்சிதைவுகள் அதிகரிக்கின்றன என்று அம்மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே கருத்தடை முறைகளைப்பற்றிய அறிவை உலகடங்கிலும் தீவிரமாக பரப்பும் சேவையில் வைத்திய நிபுணர்களும் விஞ்ஞானிகளும் ஒத்துழைக்க வேண்டுமென பிரிட்டனைச் சேர்ந்த டாக்டர் ஆர். ஜி. எட்வர்ட்ஸ் மகாநாட்டுப் பிரதிநிதிகளைக் கேட்டுக் சொண்டார்.

## அரபுக் கொரில்லா தலைவர்பிடிபட்டார்

டெல்அவிவ், டிச. 2

முக்கிய அரபுக் கொரில்லா தலைவர் ஒருவரை இஸ்ரேலியர்பிடித்திருப்பதாக அறிவித்துள்ளனர். இவர் அரபுப்பாடசாலையொன்றின் அதிபர் என்றுகருதப்படுகின்றது.

## சந்திரசேகருக்கு சர்வதேச விருது

புதுடில்லி, டிசம்பர் 1

இந்தியாவில் குடும்பத் திட்ட ஜனத்தொகை ஆராய்ச்சி வேலைகளுக்காக இந்திய சுகாதார அமைச்சர் டாக்டர் எஸ் சந்திரசேகருக்கு சர்வதேச திட்டமிட்ட பெற்றோர் சம்மேளனம் ''கொவ்மேன்'' விருதை அளித்துள்ளது.

முப்பத் தொன்பதாயிரம் ரூபா பெறுமதியான இந்த விருதைப் பெறும் முதலாவது ஆசிய பிரஜை டாக்டர் எஸ். சந்திரசேகர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் குடும்பத்திட்டம் பெருமளவில் வெற்றி அளித்துள்ளமைக்கு டாக்டர் சந்திரசேகரின் அறிவாற்றல் சேவையே பெரிதும் காரணம் என சர்வதேச திட்டமிட்டபெற்றோர் சம்மேளனம் பாராட்டியுள்ளது.

## எம். ஜி. ஆர். ரூ. 2000 நன்கொடை

சென்னை, டிச. 2

சென்னையை அடுத்த சாலி என்னும் கிராமத்திலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றிற்கு எம். ஜி. ஆர்., ரூ. 2000 நன்கொடையாக வழங்கியிருக்கிறார்.

இரு மாதங்களுக்கு முன் எம். ஜி. ஆர். தாய்சேய் நலத்தைப் பேணும் இந்த ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்தபொழுது கட்டில்கள் மருந்துகள் வாங்குவதற்கு நிதிவசதி இல்லையென்று தெரிவிக்கப்பட்டது. அப்பொழுது ஆவன செய்வதாகக் கூறிய எம். ஜி. ஆர். அதன்படி பஞ்சாயத்து யூனியன் ஆணையர் தி. நாகசுந்தரத்திடம் மேற்கண்ட தொகையைக் கொடுத்து ஆஸ்பத்திரித் தேவைகளைப் பூர்த்திசெய்யுமாறு கூறினார்

## அமைச்சருக்கு மகஜர் அனுப்புவர்

சுழிபுரம், செவ்வாய்

யாழ். மாவட்ட ஆயுள்வேதவைத்திய உதவியாளர் சங்கத்தினர் தமது குறைகளைச்சுட்டிக்காட்டியும் அவற்றை நிவர்த்தி செய்யுமாறு கோரியும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவுக்குஒருமகஜர் சமர்ப்பிக்கவுள்ளனர். இம்மகஜர் மும்மொழிகளிலும் தயாரிக்கப்படுமாம்.

இக்கும் முறைகளை கற்றுத் தரவும் முன்வருவதாக உறுதி கூறினார்.

மேலதிக அரசங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தி

தோடு மற்றும் விழாவில் கலந்துகொண்ட யாழ். அரசாங்க அதிபர் காரியாதிகாரி, உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## 'சிகரட்' இல்லையென்ற பெண்மணி

# மண்வெட்டியால் வெட்டப்பட்டாராம்

மல்லாகம், செவ்.

கடையில் சிகரெட் விற்பனவுக்கு முடிந்துவிட்டதாக தெரிவித்த பெண்மணி மண்வெட்டியினால் தாக்கப்பட்டாராம். காயமடைந்த அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டை கிழக்கு வாசியான கனகசிங்கம் சுபத்திரா என்ற பெண்மணியே காயத்திற்குள்ளானவர். இத்தாக்குதல் சம்பவத்தில் தனது சகோதரியை காப்பாற்ற உதவிக்கு சென்ற தம்பியும் தாக்கப்பட்டாராம்.

இச்சம்பவம் குறித்து சங்கானைப் பொலிசார் உடனடியாக விசாரணை செய்து சந்தேகத்தின் பேரில் கே. கணபதிப்பிள்ளை என்ற நபரை கைதுசெய்து மல்லாகம் நீதிபதி திரு. எஸ் ஆனந்குமாரசாமி முன்னனியில் ஆஜர் செய்தனர். நீதிபதி இந் நபரை பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் அடுத்த மாதம் 9-ம்திகதிக்கு ஆஜராக உத்தரவிட்டார்.

மேலும் இருவரை இச்சம்பவம் குறித்து பொலிஸார் தேடுகின்றனர்.

## 'ஒன்றுபட்டால் தான் உரிமைகள் பெறலாம்'

மாவிட்டபுரம்,செவ்.

தொழிலாளர்களிடையே சிறு பூசல்கள் ஏற்பட்டதால் பல சங்கங்கள் உருவாகி ஒவ்வொரு சங்கமும் ஒவ்வொரு விதமாக கோரிக்கை விடுத்ததினாலேயே இதுவரைகாலமும் தொழிலாளர்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகள் கிடைக்காமல் போய் விட்டன. ஆனால் இனி இந்த ஒரேசங்கத்தின்கீழ் யாவரும் ஒன்றுபட்டால் தொழிலாளர்களின் நியாயமான உரிமைகளைப் பெறலாம் என்பதில் ஐயமில்லை.'

இவ்வாறு காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலை மண்டபத்தில் 500க்கும் அதிகமான சிங்கள தமிழ் முஸ்லீம் தொழிலாளர்கள் மத்தியில் நடைபெற்றதொழிற்சாலை மூன்று சங்கங்கள் இணைந்த கூட்டத்தில் கலந்துரையாற்றிய சீமெந்து ஐக்கிய தொழிலாளர் யூனியன் தலைவர் திரு எஸ். கணபதிப்பிள்ளை கூறினார்,

அவர் மேலும் பேசுகையில் தமது நியாயமான உரிமைகளை பெறமுடியாது கஷ்டப்படும் தொழிலாளர்களை ஒன்றுசேர்த்து அவர்களின் நியாயமான உரிமைகளைபெற்றுக் கொடுப்பதற்காகவே எமது வேற்றுமைகளை நீக்கி ஒன்றுபட்டோம் என்று கூறினார்.

மற்றும்திருவாளர்கள் பியசோமா பியதாசா என் நடராசா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இறுதியில் நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. அதில் தலைவர் எஸ். கணபதிப்பிள்ளைஉபதலைவர் என். நடராசா காரியதரிசி மு. வீரசிங்கம் உபகாரியதரிசி விஜயசேகரா, தனாதிகாரி எஸ். தம்பிஐயா.

## விவசாயத்தில் மாணவர்

பருத்தித்துறை, செவ்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வதிரி திரு இருதயக்கல்லூரி ஆகிய வற்றைச் சேர்ந்த மாணவர் கடந்த சிலநாட்களாகக் கரவெட்டி கிழக்கு கப்புதூ, தில்லையம்பலம், கரம்பான், ஆகிய இடங்களிலுள்ள நெல் வயல்களில் களை பிடுங்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

இம் மாணவருக்கு இலவச பஸ் போக்குவரத்தும், மதிய போசனமும் வழங்க வடமராட்சி விவசாயப்பகுதியினர் ஒழுங்குசெய்துள்ளனர் கிராம சேவகரும், பயிர்ச் செய்கைக் குழுவினரும் இவ் வேலைகளைமேற்பார்வை செய்கின்றனர்.

பும் சுற்றறிக்கைகள் தனிச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் அனுப்பப்படுவதாகவும் இதனை தமிழிலும் அனுப்பநடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மண்டைதீவுக் கிராமசபைத் தலைவர் திரு. ச. கைலாசபிள்ளை கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்திடம் முறையிட்டதைத்தொடர்ந்து திரு. இரத்தினம் உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியிடம் தொடர்பு கொண்டதன்பயனாக வெகு விரைவில் இச்சுற்றறிக்கைகளில் தமிழும் இடம்பெறுமென வாக்குறுதி அளிக்கப்பட்டது.

## லஞ்சம் வாங்கியதாக வழக்கு

மட்டுவில், செவ்வாய்

ஆனையிறவு தடுப்பு முகாமில் வைத்து வன இலாகா பாதுகாவலர் (கார்ட்) ஒருவர் மரம் ஏற்றிச் சென்றவர் ஒருவரிடம் ரூபா 20 லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

ஆனையிறவு தடுப்பு முகாமில் நடைபெற்றதாக இரகசியப் பொலிசாரால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. ஸி. எம். தருமலிங்கம் விசாரணைக் கெடுத்துக்கொண்டபின் மேல் விசாரணையை அடுத்தமாதம் 21-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

## அழுகிய நிலையில் இருயானைகள்

விஸ்வமடு, செவ்வாய்

புதுக்குடியிருப்பு கிராம சேவகர் திரு. தம்பாப்பிள்ளை என்பவருக்கு கிடைத்த இரகசியத்தகவலின் பேரில் உடையார் கட்டில் இருட்டுமடு என்னுமிடத்தில் விஸ்வமடு விவசாயப்படை நில அளவையாளர் திரு. தங்கராசா என்பவரின் உதவியுடன் மேற்படி கிராம சேவகர் சின்னத்தம்பி நாகராசா என்பவருடைய கமத்துக்குள் சுமார் இரண்டுகிழமைக்குள் சுடப்பட்டு அழுகியநிலையில் கிடந்த இரண்டு யானைகளைக்கண்டுபிடித்தார். இந்த யானைகளையார் சுட்டிருப்பார்களென்று இன்னும் கண்டுபிடிக்கவில்லை. கிராமசேவர் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

*சமயம், கர்மம், ஞானம், பக்தி என்பன தன்னுட்பட்டு வாழ்க்கையை ஒன்றுபடச் செய்வதே மதம்.*
*—மகாத்மா காந்தி.*


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49. Jaffna. Telephone: 889.

*யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 18-ந் திகதி (3-12-69)*


## உணவில் தன்னிறைவு

1968 1969-ம் ஆண்டுக்கான மகாபோக விளைச்சலுக்குக் கிண்ணியாப் பகுதியில் 700 விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவி நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் இது பற்றி தூதுக்குழுவொன்று அமைச்சரைச் சந்தித்து விவசாயிகளின் கஷ்டத்தைஎடுத்துக் கூறியிருக்கிறது. அமைச்சர் இதுபற்றி ஆராய்ந்துதிருமலை அரசாங்க அதிபிருக்கு அறிவிப்பதாகத் தூதுக் குழுவிடம் தெரிவித்திருக்கிறார். இதே சமயம் அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆசிரியர் விவசாயப் பயிற்சிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தகுதியுடைய தமிழ் முஸ்லிம் விண்ணப்பதாரர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மற்றொரு செய்தி கூறுகிறது.

விவசாயத்தை விருத்தி செய்து உணவில் நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பது பிரதமரினது ஆவலும் அரசாங்கத்தினது இலட்சியமுமாகும். இதற்கு நாட்டு மக்கள் பூரணமாக ஒத்துழைப்புக் கொடுத்து வருகின்றனர். வடபகுதி விவசாயிகள் உப உணவு உற்பத்தியில் காட்டிய ஆர்வத்தையும் அக்கறையையும் பிரதமரே பல தடவைகளிலும் பாராட்டியிருக்கிறார்.

கிழக்கு மாகாணம் இலங்கையின் நெற்களஞ்சியமாக ஒரு காலத்தில் விளங்கியது, இன்றும் உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தில் கிழக்கு மாகாண விவசாயிகளும் தங்கள் பங்கைச் செலுத்தத் தவறவில்லை நாட்டின் நலனைப் பேண நாட்டு மக்களுக்கு உணவழிக்க விவசாயிகள் அவர்கள் வடக்கிலிருந்தாலும் சரி, கிழக்கில் வாழ்ந்தாலும்சரி என்றுமே பின்னிற்கவில்லை.

உணவில் தன்னிறைவு காண வேண்டுமென்பதை இலங்கை அரசியல் சுதந்திரமடைந்த காலத்திலேயே ஆட்சியாளர்கள் சிந்தித் வசிப்பிடம் ஆகிய மனிதனுக்கு அத்தியாவசியமானமுக்கிய விஷயங்களில் அக்கறை செலுத்தத் தவறி விட்டனர். இதன்பலாபலனை கடந்த இருபதாண்டு காலத்தில் மக்கள் அனுபவித்து விட்டனர்.

யார் என்னதான் சொன்னாலும் திட்டங்களிலும் முயற்சிகளிலும் சிலசில தவறுகள் உள்ளபோதிலும் இன்று நாட்டில் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளதென் பதையும் துணி உற்பத்தி அதிகரித்திருக்கிறதென்பதை யும் ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும் ஆனாலும் உணவிலும் உடையிலும் தன்னிறைவு பெறவும் தொழில்துறைகளை ஆரம்பித்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் நாட்டை சுபீட்சப் பாதைக்கு கொண்டுசெல்லவும் ஆட்சியாளர் மட்டுமல்ல இன,மத அரசியல் வேறுபாடுகளை மறந்து அனைவரும் சேர்ந்து ஒருமுகமான திட்டம் வகுத்து செயல்படவேண்டியது அவசியம். ஆனால்அரசியல் வாதிகள் அதுவும் அடுத்த தேர்தல் நெருங்கும் இச்சமயத்தில் இதற்குச் சம்மதிப்பார்களா என்பது சந்தேகம்,

என்றாலும் அரசாங்கமே சில நடவடிக்கைகளை இப்போது மேற்கொள்வதன் மூலம் தனது இலட்சியங்களையும் கொள்கைகளையும் நிறைவேற்றுவதில் மேலும் வெற்றியீட்ட முடியும்,

அம்பாறை தொழில் நுட்பக் கல்லூரிப் பயிற்சிக்காலும் சரி, கிண்ணியா விவசாயிகளுக்கு விவசாயக்கடன் வழங்குவதிலானாலும் சரி மற்றும் எந்த விஷயத்திலும் கூட பாரபட்சம் அதுவும் இன மதப் பாகுபாடு என்ற புகாருக்கு இடம் கொடாமல் அரசாங்க அதிகாரிகள் செயல்படவேண்டும். இதை அமைச்சர்கள் கண்காணிக்க வேண்டும். இதே சமயம் அமைச்சுகளுக்கிடையிலும் அரசாங்க இலாகாக்களுக்கிடையிலும் திட்டங்களை

# நச்சுத் திராவக மரணங்களை தடுப்பதற்கு என்ன வழி?

## டாக்டர் வேதநாயகம் கூறும் சில யோசனைகள்

— காரியாலய நிருபர் 'திரு' —

நச்சுத்திராவகங்களால் ஏற்படும் மரணங்கள் இன்று யாழ்ப்பாணப் பகுதியில் தினசரி அதிகரித்துவருகின்றன. நச்சுத்திராவகங்களைத் தெளிக்கும்போது ஏற்படும் விபத்து மரணம், தற்கொலை, கொலை செய்யப்படுவதென இதனை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். இதனால் ஏற்படும் மரணங்களை எப்படித்தான் தரம்பிரித்தாலும் இதற்கு அடிப்படைக் காரணம் நச்சுத்திராவகங்களை வட பகுதியில் மிகச் சுலபமாக எவரும் வாங்கக்கூடியதாக இருப்பது தான் விவசாய உற்பத்திக்கு விற்பனைசெய்யப்படும் இம்மருந்துக்கள் உயிர்களை மிக இலகுவாக பறிக்கின்றன. இவ்வருடத்தின் முதல் பதினொரு மாதங்களில் மட்டும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 79 பேர் இவ்வாருக அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி வைத்திய நிபுணரான டாக்டர் ஏ. வி. ஏ. வேதநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்ற உதவி வைத்தியர்கள் சங்க யாழ். கிளையின் கூட்டத்தில் உயிரைப் பறிக்கும் நச்சுத்திராவகங்கள் பற்றிப் பேசுகையிலேயே இதுபோன்ற பல ருசிகர தகவல்களை இவர் தெரிவித்தார்.

கொலைகளைத் தவிர தற்செயலாக ஏற்படும் விபத்துமரணங்கள் பற்றியே இங்கு நாம் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

இதனைத் தடுப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராயும்போது இவ்விஷயங்கள் மிக முக்கியமானவையாகும்.

வெட்டுக்காயங்கள், உரைசல் காயங்கள், புண்கள் இருப்பவர்கள் நச்சுத்திராவகங்களைக் கலக்கவோ

தெளிக்கும்போதும், தெளித்தபின் உடைகளையும் மாற்றிக் கைகளையும், உடைகளையும் சவர்க்காரத்தால் கழுவும் வரையும் உண்ணுவதோ, மெல்லுவதோ. புகைப்பதோ கூடாது

தெளித்தபின் உடனடியாக உடுத்திருந்த உடைகளையும், உடையில்லாமலிருந்த உடலின் பகுதிகளையும் சவர்க்காரத்தாலும், நீராலும் கழுவவேண்டும். அந்த உடைகளைக்கழுவ உப

## பத்திரிகைகள், வானொலி மூலம் பிரசாரம் செய்வது அவசியம்

டாக்டர் வேதநாயகம் இங்கு மேலும் பேசியதாவது:-

நச்சுத்திராவகங்களைக் குடித்ததாலும், தற்செயலாகப் பாவித்ததாலும் இவ்வருடத்தில் இதுவரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் தொகையான 79 தே இதுவரை காலத்திலும் மிகக் கூடிய தொகையாகும் இது அசாங்க விவசாய அதிகரிப்புப் பிரசாரம் இங்கு எவ்வாறு தவறான வழியில் பாவிக்கப்படுகின்றதென்பதைப் புலனாக்குகின்றது.

நச்சுத்திராவகங்கள்மூலம் நடைபெறும் தற்கொலைகள் தெளிக்கவோ கூடாது.

வாயையும் மூக்கையும் ஒரு சீலைத்துணியால் கட்டிக்கொண்டு நச்சுத்திராவகங்களைத் தெளிக்கவேண்டும் இவ்வாறு செய்யாது விடில் மருந்து காற்றுடன் கலந்து உட்சென்றுவிடக்கூடும்.

காற்றிற்கு எதிராகத் தெளிககக்கூடாது. காற்றிற்கு எதிராகத் தெளித்தவர்கள் தான் அதிகமாகத் தாக்கப்பட்டுள்ளார்கள்.

ஒரு நாளில் ஒருவர் மொத்தம் 3 மணித்தியாலங்களுக்குக் கூடுதலாக நச்சுத்திராவகம் தெளிக்கக் கூடாது.

யோகித்த பாத்திரங்களை குடிப்பது, சமையல்செய்வது போன்றதேவைகளுக்கு நீர் எடுக்க உபயோகிக்கக் கூடாது.

பொலிடோலை அளிக்க உபயோகித்த கரண்டிகள், அகப்பைகள், பாத்திரங்கள் முதலியவற்றைஉப்புசோடா கரைத்த வெந்நீரால் கழுவ வேண்டும்.

மரக்கறி வகையும், கால்நடைகளின் உணவுவகையும் நச்சுத்திராவகம் தெளித்து ஒருவாரத்தின் பின்னரே உண்ணவேண்டும்.

பழங்களானால் கடைசியாகத் தெளிந்து இரண்டு மூன்று வாரங்களுக்குப் பின்னரே உண்ணவேண்டும்.

நச்சுத்திரவகங்களைத் தெளித்த மேய்சல் நிலங்களில் குறைந்தது 7 நாட்களுக்காவது கால்நடைகளை மேயவிடக்கூடாது.

இப்படியான அபாயங்கள் ஏற்படாமல் தடுக்க நச்சுத் திராவகத்தை பாவிக்கும் முறைகள் பற்றி பத்திரிகைகள், வானொலிகள், துண்டுப் பிரசுரங்கள், பொதுக் கூட்டங்கள் மூலம் துரித பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றும் டாக்டர் ஏ. வி.ஏ. வேதநாயகம் தமது பேச்சின் போது முக்கியமாகக் குறிப்பிட்டார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

தமிழ். ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் இதுபற்றிய பிரசுரங்கள் வெளியிடப்படல் வேண்டும்.

தேசிய சேமிப்பு வங்கி, கயரோகம் ஆகியன பற்றி வீடுவீடாக பிரச்சாரம் செய்வது போல் இதற்கும் செய்யப்படல் வேண்டும். பாடசாலைகள் தோறும் இதுசம்பந்தமான சொற்பொழிவுகள் நடாத்தப்படல்வேண்டும்.

நச்சுத்திராவகங்கள் விவசாயிகள், சாதாரண பொது மக்கள் கையில் கிடைக்க வழியில்லாமல் போகக்கூடியதாக விவசாயப்பகுதியினர் கிராம அபிவிருத்திப் பகுதியினர் மூலம் தோட்டங்களுக்கு நச்சுத்திராவகம் தெளிப்பது பற்றி ஆராய வேண்டும் என்றும் டாக்டர் மேலும் குறிப்பிட்டார்.

# 'ஆயுதப்புரட்சி மூலம் சோஷலிஸ அரசை அமைக்க வேண்டும்'


## அல்பேனிய தினவிழாவில் திரு சண்முகதாசன் அழைப்பு

விஞல்தான் விடுதலை கிடைத்தது. சீனவில் நடந்ததை நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று அல்பேனியாவிற்கும் சீனவிற்குமுள்ள உறவு உலகத்திலேயே இல்லாத நட்புறவு. இங்கு ஒரு கோடி மக்களை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிருர்கள். சீன

# கார்த்திகேசு மாஸ்டர் ஒரு சிவதொண்டன்

— செ. இரத்தினசபாபதி —



மெலிந்த தேகம், எளிமையான உடை, தெய்வ பக்திஊறின உள்ளம். சிவ கைங்கரியங்கள் செய்வதில் ஆர்வம் சிறிதும் தற்பெருமையில்லாத சுபாவம் யாவருக்கும் உதவிபுரியவேண்டும் என்ற பரந்த மனப்பான்மை-இவையே கார்திகேசு மாஸ்டர். இவர் ஒரு சாதாரண ஆசிரியர்-பட்டதாரியல்ல. ஆனால் ஓர் அனுபவமுள்ள ஓர் கல்வி ஆசான் ஓர் இளம் மாணவனுக்கு பிரத்தியேகமாக கணிதம், அட்சரகணிதம், கேத்திர கணிதம் முதலியவற்றை தமிழில் கற்பிக்கும் போது உடனிருந்து கவனித்திருக்கிறேன். புரியாததைப்புரிய வைப்பதற்கு இவர் கையாளும் வழிகள் மெச்சத்தக்கவை, மேற்படி கணிதங்களில் உள்ள சிக்கல்களை பக்குவமாக தெளிவாக்கிவிளங்க வைப்பதினால் இவருக்கு மாணவவட்டாரங்களில் பெருமதிப்பு உண்டு.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் நடக்கும் உற்சவங்களின்போது இவர் சுறுசுறுப்புடன் புரியும் சேவைகளை பாராட்டாமல் இருக்க முடியாது. அபிஷேகத்துக்கு இளநீர் கொத்துவது முதல் தீவெட்டி தாங்குவது வரை கோயிலில் நடக்கவேண்டிய சகல பூஜைகளுக்கும் ஆகவேண்டிய தொண்டுகளை பயபக்தியுடனும், திறமையுடனும் செய்வதை நேரில் கண்டவர்களே அறிவர். வாகனங்களில் பிடித்திருக்கும் தூசிகளைத் தன்கையாலேயே துணிகொண்டு துடைத்து, ஆட்களைச் சேர்த்து வாகனசாலையிலிருந்து வாகனங்களைத் தூக்கிச் சுமந்து வசந்தமண்டபவாசலில் வைத்து சுவாமி வீதிஉலாவ வருவதற்குதயார் பண்ணும் போது மாஸ்டர் அவர்கள் காட்டும் இணையற்ற தைரியமும் உற்சாகமும் இளவல்களைக் கூட வியக்கச் செய்யும். சுவாமீ வீதி உலாவ வரும் போது மாஸ்டர் ஒரு பொலிஸ் காரராகமாறி விடுவார். வீதிஉலாவிற்குசுவாமி கோபுரவாயிலைவிட்டுப்புறப்பட்டவுடன்மாஸ்டர் தனது வேட்டியை மேலுக்கு மடித்துகட்டிக்கெண்டுபொலிஸ் கடமை செய்ய தன்னைதயாராக்கி கொள்வார். சுவாமிக்கு முன்னும் பின்னும் வரும் கார்களை கைகாட்டி நிறுத்தி ஒதுங்கி செல்லவிடுவார். சைக்கிள் காரரை ஆசனத்திலிருந்து இறக்கி வீதியின் கரையோரமாகசெல்ல வைப்பார். தேர், பெரிய சப்பரம் மற்றும் பெருந்திருவிழாக்களின்போது உண்டாகும் சிறுவர்களின் ஆர்ப்பாட்டங்களை அடக்கி அவர்களைக்கொண்டே வடம்பிடிக்கச் செய்து அமைதியாக நடத்திவைப்பார். திருவிழாவின் போது நடக்கும் மண்டபப்படிகளில்கூடும் சிறுவர்களைஅடக்கி அமர்த்திஅவர்களுக்கு பிரசாதம்பழம் முதலியவற்றை மாஸ்டர் விநியோகிக்கும் சிறப்பேதனி.

தனது ஓய்வு நேரத்தை சிவ தொண்டிற்கே அர்ப்பணிக்கும் மாஸ்டர் இம்மாதம் 27ந்திகதியுடன் ஆசிரியர் பதவிலிருந்து ஓய்வு பெற்ருர். இக்காலத்தில் இவ்வகையான சிவதொண்டுகளில் ஈடுபடுவோர் மிகக்குறைவு வாகனம் காவக்கூட ஆளில்லாத காலம் இது. இத்தகைய வருந்தற்குரிய சூழ்நிலை உள்ளகாலத்தில் சிவதொண்டில் ஈடுபடுபவர்களுக்கு தனிமதிப்பு கொடுக்க வேண்டியது எமது கடமை மாஸ்டர் அவர்கள் இடையருது சிவதொண்டில் ஈடுபடுவதினல் இவரை ஓர்உத்தம சிவதொண்டன் என்று சொல்லலாம்.

கார்த்திகேசு மாஸ்டர் மேன்மேலும் இறைவனுக்குச் சேவை செய்ய எல்லாம் வல்ல ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர பெருமாள் இவருக்குநீடித்த ஆயுளையும் தேக திடகாத்திரத்தையும் அருள்வாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]
தாலும்சரி என்றுமே பின் நிற்கவில்லை.

உணவில் தன்னிறைவு காண வேண்டுமென்பதை இலங்கை அரசியல் சுதந்திரமடைந்த காலத்திலேயே ஆட்சியாளர்கள் சிந்தித்திருந்தால் இன்னமும் இலங்கை அரிசிக்காக வெளி நாடுகளை நம்பியிருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிருக்காது:

மொழிப் பிரச்னையிலும் இன மதப் பிரச்னையிலும் அரசியல் ஆதிக்கப் போட்டியிலும் அரசியல் வாதிகள் அக்கறை செலுத்தினர்களே யொழிய உணவு, உடை,

[illegible] கொடாமல் அரசாங்க அதிகாரிகள் செயல்படவேண்டும். இதை அமைச்சர்கள் கண்காணிக்க வேண்டும். இதே சமயம் அமைச்சுகளுக்கிடையிலும் அரசாங்க இலாகாக்களுக்கிடையிலும் திட்டங்களை ஒருமுகப்படுத்தி அவற்றைச் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்

விவசாயிகளுக்கும் விவசாயப் பயிற்சி பெற்றவர்களுக்கும் ஊக்கமும் உதவியும் அளிப்பதில்தான் உணவில் நாடு சுயதேவைப் பூர்த்தியடைவது பெரிதும் தங்கியிருக்கிறது.

# நிலத்துக்கடியில் புராதன கோயில்

விஸ்வமடு, செவ்வாய்

விஸ்வமடு, உடையார் கட்டுச்சந்திக்கு அண்மையாக ஆதிகால சிற்பக்கல்கொண்ட புராதனகோவில் ஒன்று விவசாயப்படை வீரர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நிலத்துக்கடியில்சுமார் 3 அடி ஆழத்தில் இருந்த இக்கோவிலைச்சுற்றி 20 அடிநீளத்திற்கு படிகள் கட்டப்பட்டுள்ளது: இக்கோவிலில் 4 அடி விட்டமுள்ள ஆதிகால தேர்ச்சில்லொன்று காணப்பட்டதுடன், கோவிலுக்குத்தேவையான கற்பூர வகைகள் எரிக்கும் இடவசதியும் நிறைந்திருக்கிறதாம். நீர்பாசனப் பகுதியில் கடமையாற்றும் திரு. எம். ஆனந்தராசா என்ற உத்தியோகத்தர் தலைமையில் சென்ற விவசாயப் படைவீரர்கோஷ்டி மண்ணை வெட்டி வேலைசெய்தசமயம் கண்டு பிடிக்கப்பட்ட இக்கோவிலை விவசாயப்படை வேலை அமைப்பாளர்களான திரு. எஸ் முருகையா, திரு ஆர் தங்கராசா ஆகியோர் பார்வையிட்டனர். இக்கோவிலுக்கு இப்பகுதி மக்களால் உடனேயே பொங்கல் ஒன்றும் நடத்தப்பட்டது.

# வேலை இழந்த சாரதிக்கு ஒரு மாதச் சம்பளம்

## தொழில் நீதிமன்ற தீர்ப்புகள்

யாழ்ப்பாணம், புதன்

முன்னறிவித்தல் இல்லாமல் வேலைநீக்கம் செய்யப்பட்ட சாரதிக்கு ஒருமாதச் சம்பளம் வழங்குமாறு யாழ்ப்பாணம் தொழில்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்விசாரணையில் வவனியாவிலுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றில் சாரதியாகக் கடமையாற்றிய எம் ராஜீ என்பவர் தன்னை மேற்படி ஸ்தாபனத்தினர் முன்னறிவித்தல் இல்லாமல் வேலை நீக்கம் செய்ததாகத் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்தே சாரதிக்கு ஒரு மாதச் சம்பளமான ரூபா 200 வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

மனுதாரர்சார்பில் தொழில் துறை ஆலோசகர் திரு எம் எல். ரி. துரைசிங்கமும், வர்த்தக ஸ்தாபனம் சார்பில் வழக்கறிஞர் வல்லிபுரமும் ஆஜராகியிருந்தனர்.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றில் கடமையாற்றிய கே பி கந்தசாமி என்பவர் தாக்கல்செய்திருந்த மனுவும் இங்கு விசாரணை செய்யப்பட்டது. மனுதார் நிரந்தரமற்ற ஊழியராக அங்கு கடமையாற்றியதாகவும், அதனுல் அவருக்கு ஒரு மாதச் சம்பளம்கொடுக்கப்படவேண்டியதில்லை என்றும் எதிர்மனுதார் தரப்பில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எதிர்மனுதார் சார்பில் திரு. எம் எல் ரி துரைசிங்கம் ஆஜரானுர்.

தொழில் நீதிமன்றத் தலைவர் திரு ஸ்ரீமானே தலைமையில் இம்மனுக்கள் விசாரணை செய்யப்பட்டன

(கா-நி)

# ... அரசை அமைக்க வேண்டும்'

## அல்பேனிய தினவிழாவில் திரு சண்முகதாசன் அழைப்பு

யாழ்ப்பாணம், புதன்

'அல்பேனியாவில் நடந்த புரட்சிப் போராட்டத்தை பின்பற்றி நாமும் இங்கு ஆயுதம் தாங்கி போராட்டத்தின்மூலம் ஒரு சோஷலிச அரசாங்கத்தை உருவாக்க வேண்டும். ஆயுதங்களை நாம் பிறநாட்டுலிருந்து வரவழைக்கத் தேவையில்லை, பொலிசாரிடமும் இராணுவத்திடமும் உள்ள துப்பாக்கிகளைப் பறித்து நாம் போராட வேண்டும். இது பெரிய கஷ்டமான காரியமல்ல. யாழ்ப்பாணத்திலும் அண்மையில் மலைநாட்டிலும் இது நடந்திருக்கிறது.'

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடந்த அல்பேனியா குடியரசின் 25-ம் ஆண்டு நிறைவுவிழாவில் பேசிய திரு. சண்முகதாசன் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. நா. முத்தையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. சண்முகதாசன் மேலும் கூறியதாவது:

இதுவரை காலமும் அல்பேனியாவைப்பற்றி இங்குள்ள மக்கள் அதிகம் தெரிந்திருக்கவில்லை. சீனவிலும், ரஷ்யாவிலும் நடந்த பெரும் புரட்சிகளைப்பற்றியே அறிந்திருக்கிருர்கள். சீன. ரஷ்யா பெரிய நாடுகளென்றும் சின்னஞ்சிறுதீவான இலங்கையில் பெரும் நாட்டில் நடந்த புரட்சிகளை இங்கு நடத்த முடியுமா என்றும் கேள்விகளைச் சிலர் கிளப்பியிருக்கிருர்கள். இலங்கை போன்ற சிறிய நாடான அல்பேனியா சுதந்திரம் பெற்றதுபற்றியும், பாதுகாத்து முன்னேறியதைப் பற்றியும், நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். அல்பேனியா சிறிய தேசம். கிட்டத்தட்ட எமது நாட்டைப் போன்றது. அங்கும் ஜனத்தொகை 20 லட்சம் மட்டுமே. பிரயாண வசதியில்லை. அந்நாட்டை சுற்றிவர ஏகாதிபத்திய வாதிகளின் செடுபிடிகள்.

இந்த நிலையில்தான் அல்பேனியா முன்னேற்றமடைந்திருக்கிறது.

1912-ம் வருடம் மட்டும் அந்நாடு ஏகாதிபத்தியவாதிகளிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. 5000 வருடகால வரலாற்றைக் கொண்ட இந்நாடு கிரேக்கரிடமும் துருக்கியரிடமும் ரோமரிடமும் அடிமைப்பட்டுக் கிடந்தது. 500 வருடம் துருக்கியிடம் அடிமைப்பட்டுக் கிடந்து 1912-ல் விடுதலை பெற்றது. 500 வருடகாலமும் அவர்கள் அடிமைகள் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. தொடர்பான போராட்டம் நடத்திவந்தார்கள். 1912-ல் விடுதலை பெற்றபின் ஒரு மன்னரின் தலைமையில் ஆட்சி நடைபெற்றது. 1938-ல் இத்தாலி நாட்டிற்கு அடிமைப்பட்டனர். ஒரு லட்சம் இத்தாலிய துருப்புகளுக்கும். 7 லட்சம் ஜேர்மனிய துருப்புகளுக்கும் எதிராகவும் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1941-ம் ஆண்டு நவம்பர் 8-ம் திகதி தோழர் அன்வர் ஹாஸாதலைமையில் தொழில்கட்சி உருவானது. அன்வர் ஹாஸாவின் தலைமையில் நடந்த போராட்டத்தின் பயனுக 44-ம் வருடம் நவம்பர் 29-ம் திகதி மீண்டும் விடுதலை கிடைத்தது. அந்நேரம் யூகோஸ்லாவியாவுக்கும் அல்பேனிய மக்கள் உதவி செய்தார்கள்.

இதனுல் யூகோஸ்லாவியாவில் 10 லட்சம் அல்பேனியர் இருக்கின்றனர். இவர்களின் பிரச்னையை ஏகாதிபத்திய நாடுகள் தீர்க்காமல் தட்டிக் கழித்தன.

### மனஉறுதி மட்டுந்தான்

புரட்சிபற்றிப் பேசுகிருர்களே இவர்களுக்கு துப்பாக்கி எங்கிருந்து கிடைக்கும் என்று நம்மைப் பார்த்து சிலர் கேட்கின்றனர். அல்பேனியாவில் மக்கள் எப்படிப் போராட்டம் நடத்திஞர்கள். அவர்களுக்கு எந்த நாடும் துப்பாக்கி கொடுக்கவில்லை. மலைகளுக்குச் சென்று அவர்கள் கொரில்லா யுத்தம் பயின்றபோது அவர்களிடம் துப்பாக்கி இல்லை; சாப்பிட பாண் இல்லை; குடிக்கத்தண்ணீர் இல்லை. மன உறுதி ஒன்று மட்டுமே இருந்தது எதிரிகளின் துப்பாக்கிகளை பறித்துத்தான் தாக்கினேம் என்று தலைவர் அன்வர் ஹாஸா என்னிடம் தெரிவித்திருக்கிருர்.

இந்நாட்டில் புரட்சி செய்வதற்கு வேருெரு நாட்டிலிருந்து துப்பாக்கி கொண்டு வரத் தேவையில்லை வேருெரு நாட்டின் உதவிகளை எதிர்பாக்கத் தேவையில்லை. அந்தச் சுதந்திரம் ஆக்கிரமிப்பாக மாறிவிடக்கூடும். துப்பாக்கிகளைப் பறித்தெடுப்பது கஷ்டமான காரியமல்ல. யாழ்ப்பாணத்திலும், மலைநாட்டிலும் இப்படி நடந்திருக்கிறது. அண்மையில் மேபீல்ட் தோட்டத்தில்கூட, தொழிலாளர் பொலிஸாரிடமிருந்து துப்பாக்கிகளைப் பறித்துத் தாக்கியிருக்கின்றனர். அங்கு 1300 தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். தோட்ட முதலாளி பொலிஸாரின் உதவியுடன் 14 தொழிலாளர்களை வேலைக்கு எடுத்திருந்தார். பொலிஸ் பாதுகாப்பில் அவர்கள் வேலைக்குச் சென்றனர். தொழிலாளர் பொலிஸ் துப்பாக்கிகளைப் பறித்துப் போராட்டம் நடத்திஞர்கள். இதனுல் ஹட்டன் மாவட்டம் முழுதும் வேலை நிறுத்தம் பரவியது தொழிலாளரின் தாக்குதல்களை எதிர்க்கமுடியாமல் மற்றப் பகுதிகளிலிருந்து மேலும் நூற்றுக்கணக்கான பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். அதன் பின்தான் குழப்பம் அடக்கப்பட்டது. ஆதலால் துப்பாக்கிகளைப் பறிப்பது கஷ்டமான காரியமல்ல. பொலிஸாரின் எண்ணிக்கை, தொழிலாளரிலும் பார்க்க மிகமிகக் குறைவு.

சீனவில் புரட்சி நடந்தபோது யார் கொடுத்தார்கள் துப்பாக்கி? ரஷ்யா கொடுத்ததாகச் சிலர் கூறுவது தவறுனது. அந்நேரம் ரஷ்யாவிற்கும் சீனவிற்குமிடையில் போக்குவரத்து இருந்தது கிடையாது. சீன மக்கள் தங்கள் சக்தியின் மூலமே போராட்டம் நடத்திஞர்கள். மக்களின் துணி[illegible] வேண்டும்.

இன்று அல்பேனியாவிற்கும் சீனவிற்குமுள்ள உறவு உலகத்திலேயே இல்லாத நட்புறவு. இங்கு ஒரு கோடி மக்களை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிருர்கள். சீனவில் 70 கோடி மக்கள் வாழ்கிருர்கள். இந்நிலையில் அல்பேனியாவிற்கும் பல உதவிகளை சீன அளித்துவருகிறது.

அரசியல்கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்று சந்தர்ப்பவாதிகளாக இருக்கின்றனர். ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை கொழும்பில் சிறிமா பண்டாரநாயக்கா கண்டித்தார். அதே சிறிமா பண்டாரநாயக்கா, சோவியத் ரஷ்யாவுடன் சேர்ந்து ஆக்கிரமிப்பு நடத்திய கிழக்கு ஜெர்மனி விழாவிற்குச் சென்றிருக்கிருர். கொழும்பிலும், ஆட்சிமன்றத்திலும் பிரதமரையும், தேசிய அரசாங்கத்தையும் தாக்கிப் பேசிய சமஷ்டி வாதிகள் வடபகுதியில் பிரதமருக்கும் மந்திரிகளுக்கும் வரவேற்பளிக்கிருர்கள். ஆதலால் சந்தர்ப்பவாதிகளால் என்றுமே விடுதலைபெற முடியாதென்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்."

# தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பத்திரிகை விநியோகம் செய்வதற்கு சயிக்கிள் உள்ள பையன்கள் தேவை. நேரில் வரவும். பொதுமுகாமையாளர், ஈழநாடு யாழ்ப்பாணம். 1855

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஜெகஜீவன்ராம் தலைவராகத் தெரிவு

புதுடில்லி, டிச.2

இந்திய உணவு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் இந்தியக் காங்கிரஸ்கட்சியின் புதியதலைவராக அறிவிக்கப்பட்டிருக்கிருர்.

திருமதி இந்திரா காந்தியின்ஆதரவிலான காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு திரு. ஜெகஜீவன்ராமைத் தவிர வேறு எவரும் வேட்பு மனு தாக்கல் செய்திருக்கவில்லை, பம்பாயில் நடைபெறவிருக்கும் கட்சியின் மாநாட்டில் திரு ஜெகஜீவன்ராம் இப்புதிய பதவியை ஏற்றுக் கொள்வார்

## வேலையற்ற...

( 1 பக்கத் தொடர்ச்சி))

சம்மேளனத் தலைவராக திரு. கே. சதானந்தனும்' செயலாளராக க. குணேந்திரதாசனும், பொருளாளராக சு. வரதராஜேஸ்வர முதலியும் தெரியப்பட்டனர் 8 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் நிறுவப்பட்டது.

(கா. நி.)

[illegible] வேட்டியை மேலுக்கு மடித்துகட்டிக்கொண்டுபொலிஸ் கடமை செய்ய தன்னை தயாராக்கி கொள்வார். சுவாமிக்கு முன்னும் பின்னும் [illegible] சமேத வைத்தீஸ்வர பெருமாள் இவருக்குநீடித்த ஆயுளையும் தேக திடகாத்திரத்தையும் அருள்வாராக!

# "அல்பேனியாவில் முதலாளிகளுக்கு சர்வாதிகாரம் மக்களுக்கு ஜனநாயகம்"

யாழ்ப்பாணம், புதன்

அல்பேனியாநாட்டில் சர்வாதிகாரஆட்சி நடக்கிறது. சோஷலிஸ அமைப்பு நாடுகளில் எல்லாம் சர்வாதிகார ஆட்சிதான் நடக்கிறது. இந்த நாடுகளில் ஐந்துசதவீதமாக இருக்கும் சுரண்டல் காரருக்கும், நிலப்பிரபுக்களுக்கும், முதலாளிகளுக்கும் எதிராகவே சர்வாதிகார ஆட்சீ நடக்கிறது. 95 சதவீதமான மக்களுக்குஜனநாயக சுதந்திர ஆட்சியே நடக்கிறது சகல சுதந்திரத்தையும் இம்மக்கள் அனுபவித்து உண்மையான ஜனநாயகத்தை அங்கு காண்கிருர்கள்

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடந்த அல்பேனியா தேச நிறைவு விழாவில் இலங்கை வாலிபர் சங்க சம்மேளனப் பிரதிநிதி திரு எஸ் செந்திவேல் பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்

## தபால்,..

[1 ப்பக்கத் தொடர்ச்சி]

புகையிரத நிலையங்களில் பார்சல் பகுதியில் பார்சல்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வழக்கம்போல் மீண்டும் புகையிரதசேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னரே இப்பார்சல்கள் அனுப்பப்படும். பழுதடையக்கூடிய முட்டை, மாம்பழம், மரக்கறி வகைகளை பார்சலில் அனுப்பாமலிருப்பது நல்லதென புகையிரதப் பார்சல் பகுதி ஊழியர் ஒருவர். தெரிவித்தார்.

### விமான சேவை

வழக்கம் போலவே கொழும்பிற்கும், யாழ்ப்பாணத்திற்கும் விமான சேவை இருக்குமென்றும் மேலதிக சேவை எதுவும் இல்லையென்றும் எயர் சிலோன் காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புகையிரதசேவை பற்றி எதுவும் தெரியாமலிருப்பதால் தபால்சேவை பற்றி நிச்சயமாக எதுவும் கூற முடியாமலிருப்பதாகவும், விமானத் தபால் வழக்கம்போல் இருப்பதாகவும் யாழ்ப்பாணம் தபாற்கந்தோர் அதிபர் தெரிவித்

### பெட்ரோல் விநியோகம்

புகையிரத சேவை நடைபெருததால் பெட்ரோல் விநியோகம் தடைப்படவில்லையென்றும் வடபகுதிக்கு15 நாட்களுக்கு தேவையான பெட்ரேல் கையிருப்பில் இருப்பதாகவும் பெட்ரேலியம் கூட்டுத்தாபன வடபிராந்திய அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

சரவணமுத்து இளையதம்பி

உடும்பராய் இந்துக்கல்லூரி இளைப்பாறிய ஆசிரியரும், சரசாலையைச் சேர்ந்தவருமாகிய திரு. சரவணமுத்து இளையதம்பி காலமாகிவிட்டார். இவர், சாந்தநாயகியின் அருமைக் கணவரும், புவனேஸ்வரி, பரமேஸ்வரி, பராசக்தி [ஆசிரியை உடும்பராய் இந்துக் கல்லூரி], சந்திரமௌலீசன் [யாழ். மாநகரசபை], யோகேஸ்வரன் [ஆசிரியர் சூசையப்பர் கல்லூரி, பண்டாரவளை], கங்கா மௌலீசன், நகுலேஸ்வரி ஆகியோரின் அருமைத் தந்தையும், மா. செ. கனகரத்தினம், [காணிப்பதிவு அலுவலக இளைப்பாறிய லிகிதர்], செ. சோமஸ்கந்தர் [ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி], நா. நவரத்தினசிங்கம் [அரசாங்க வேலைப்பகுதி, யாழ்ப்பாணம்], நவமணி, தியாகாம்பிகை [ஆசிரியை பௌத்த மகளிர் கல்லூரி, கொழும்பு] ஆகியோரின் அருமை மாமனுரும் ஆவர். அன்னரின் பூதவுடல் சரசாலைச் சந்தி இல்லத்திலிருந்து புதன்கிழமை 3-12-69-ம் திகதி பகல் 12 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு வேம்பிராய் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். 1458

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org